விளம்பர விகிதங்களுக்கு :
மனேஜர்,
சத்தியவேத பாதுகாவலன்
பெரியதெரு,
யாழ்ப்பாணம்
என்ற முகவரிக்கு எழுதுக.

# சத்தியவேத பாதுகாவலன்

சந்தா விபரம்
வருடசந்தா
இலங்கை ரூபா 5-50
வெளிநாடுகள் „ 6-50

Telegram : "CATHOLIC PRESS", JAFFNA. 1876-ம் வருஷம் ஆரம்பிக்கப்பட்டது. Telephone : No. 300
REGISTERED AT THE CEYLON G. P. O. AS A NEWSPAPER.

"கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண்விழிப்பது வியர்த்தம்"

85-ம் புத்தகம் | யாழ்ப்பாணம் 1960-ம் ஆண்டு வைகாசி மாதம் 26-ந் திகதி வியாழக்கிழமை — பிரதிசதம் 10 | 20-ம் இலக்கம்.

## கொழும்பு அதிமேற்றிராணி ஆண்டவர் அவர்களும் இலங்கையின் ஏனைய கத்தோலிக்க மேற்றிராணிமார்களும் தங்கள் மேற்றிராசனங்களிலுள்ள குருமாருக்கும், விசுவாசிகளுக்கும் கர்த்தரில் சுபமும், ஆசீர்வாதமும் விரும்பி விடுக்கும் கூட்டு நிருபம்

(முன்தொடர்ச்சி)

### 4-ம்பாகம்

#### கத்தோலிக்கருக்குரிய புத்திமதிகள் :

இதுகாறும் நல்லறிவும் நன் மனமுமுள்ள சகலமனிதருக்குரிய முறையில் பொதுப்பட எழுதி யுள்ளோம். ஆனால், இந்நிருபத்தை முடிப்பதற்குமுன் எமது ஞான ஆளுகைக்குட்பட்ட கத்தோலிக்க மக்களுக்குச் சில விசேஷ புத்திமதிகளைக் கூறுதல் எமது கடமையெனக் கருதுகின்றோம்.

கிறிஸ்துநாதரில் எமக்கு மிகவும் அருமையான பிள்ளைகளே, வானத்தையும் பூமியையும் படைத்து ஆண்டு நடத்திவரும் பரம்பொருளும், எங்கள் நேசத் தந்தையுமாகிய தேவனில் விசுவாசம் கொண்டுள்ள நீங்கள், அவருடைய படிப்பனையின்படி ஒழுகுவதற்கு உங்களுக்கு ஓர் விசேஷ காரணமுண்டு. ஏனெனில், ஒழுக்கத்துறையில் சுபாவப் பிரமாணமானது காத்திரமானதும், கட்டாயமுள்ளதும், நித்தியமானதுமாய் இருந்தாலும், அது தேவ சித்தத்தின் வெளிப்படுத்தலாய் இருப்பதன் நிமித்தமே அதற்கு மேலான மகத்துவமும், பரிசுத்த தனமும், உண்டென்பதை நீங்கள் நன்கு அறிவீர்கள்.

ஆகவே, காமசத்துவத்தின் பிரயோகத்தைக் கட்டுப்படுத்தும் பிரமாணத்துக்கு ஆதாரமாகத் தேவசித்தம் இருக்கிறதாயின், அப்பிரமாணத்துக்கு மாறாக நடந்தால் இறுதியில் நமக்குத் தீங்கும் துன்பதுயரமும் உண்டாகும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை.

#### உண்மைக்கும் அன்புக்கும் இருப்பிடமான தேவன் :

தேவனுடைய வார்த்தைகளை நீங்கள் கேட்கும்பொழுது நீங்கள் செவிசாய்ப்பது "மானிட ஞானத்தின் பெலவீனமான வார்த்தைகளுக்கல்ல; அறிவாளிகளாயினும் அளவுள்ளவர்களும் பிழைவிடக்கூடியவர்களும், சந்தர்ப்பத்திற்கேற்றவாறு மாறும் உறுதியற்ற மானிட சுபாவத்தைக் கொண்டவர்களுமானவர்களின் முரண்பாடுள்ள அபிப்பிராயங்களுக்கும் நீங்கள் செவிசாய்ப்பதில்லை; ஆனால், ஞானத்தின்



இருப்பிடமும், மானிடவர்க்கத்தின் காரணகர்த்தாவுமாகிய கடவுளுக்கே செவிசாய்க்கின்றீர்கள் என்று நீங்கள் அறிவீர்கள். மனுக்குலத்துக்கு மிகவும் நன்மை பயக்கக்கூடிய ஏதுக்கள் எவை யென்றும் அவரறிவார். தேவன் உண்மையின் இருப்பிடமாய் இருப்பதுமல்லாமல், அவர் அதற்குமேலாக அன்பின், இரக்கத்தின் இருப்பிடமாகவும் இருக்கிறார் என்பதையும் நீங்கள் அறிவீர்கள். அவர் நம்மை "நித்திய நேசங்கொண்டு" (எரே. 31; 3) நேசிக்கிறார்; "திரளான தண்ணீர்களாலும் அவிந்துபோகாத" (உ. ச. 8: 7) நேசத்தினாலும் நேசிக்கிறார். "ஒரு தாயானவள் கற்பகர குழந்தையை மறந்தாலும் நாம் உன்னை ஒருபோதும் மறவோம்" (இசை. 49: 15) என்ற முறையில் மாபெரும் அன்புகொண்டு அவர் நேசிக்கின்றார்.

அவர் "ஒடிந்தநாணலை நசுக்கவும் மாட்டார்" (இசை. 42: 3); "நொறுங்கித் தாழ்த்தப்பட்ட இருதயத்தைப் புறக்கணிக்கவும் மாட்டார்" (சங் 50: 18). "வருந்திச்சுமை சுமக்கிறவர்களாகிய நீங்கள் எல்லோரும், என்னண்டை வாருங்கள், நான் உங்களைத் தேற்றுவேன்" (மத். 11: 28) என்று கூறியவர், நீங்கள் தாங்கக்கூடியதற்கு மேலதிகமான சுமையை உங்கள்மேல் சுமத்தவே மாட்டார். நமக்குள்ள சுமையை, நாம் தனிமையாய்ச் சுமக்கப் பார்த்தால், அது தாங்க முடியாத சுமையாகவே இருக்குமென்பதில் எவ்வித ஐயமும் இல்லை. ஆனால், நாம் அவரிடம் சென்று, அவரோடு கூடநடந்து செல்வோமானால், "என் நுகம் இனிதாயும், என்சுமை இலகுவாயும் இருக்கிறது" (மத். 11: 30) என்னும் வாக்கியத்தின் உண்மையை நன்குணர்வோம்.

மிகவும் அருமையான பிள்ளைகளே, நம்பிக்கை நிறைந்த, சோர்வற்ற செபத்தினாலும், தேவஅருளின் வாய்க்கால்களாகிய தேவதிரவிய அனுமானங்களினாலும், விசேஷமாய்ப் பச்சாத்தாபத்தினாலும், தேவநற்கருணையினாலும், மெய்விவாகத் தேவதிரவிய அனுமானத்தின் நிரந்தர அருளினாலும், நீங்கள் சுபாவத்திற்கு மேலான பெலனைப் பெற்றுக் கொள்ளலாம் என்பதை மறந்து விடாதிருப்பீர்களாக.

எனினும், மிகவும் அருமையானவர்களே, வாழ்க்கையின் கஷ்டங்களுக்குத் தப்பிக்கொள்வதற்காக, நம்மை உண்டாக்கிக் காப்பாற்றி [illegible] தேவைகளைப் பூர்த்திப்படுத்திக் கொண்டுவருகிறவராகிய சருவேசுரனுக்கு எதிராகத் துரோகஞ் செய்தால் நாம் எத்துணை முட்டாள்கள் என்று கூறவேண்டும்.

#### விசுவாசத்தின் பரீட்சிப்பு :

உங்களில் அநேகரின் கொடிய வாழ்க்கை நிலைபரங்களையும், வறுமைக்கும் வருங்கால சேமமின்மைக்கும் எதிராக நீங்கள் நடாத்தும் பெரும் போராட்டத்தையும், அதற்கு மனஉறுதியும், சிற்சில சமயங்களில் வீரியமும் அவசியம் என்பதையும் திருச்சபை நன்கு உணர்கின்றது.

குடும்பத் திட்டப் பிரசாரமும் பொதுசன அபிப்பிராயமும் உங்கள் மனதை வலிமையாய்த் தாக்கக்கூடும்; நீங்கள் இழந்துவிடுகின்ற லௌகிக, அதாவது, பொருளாதார அல்லதுசமுதாயச் சலுகைகள் உங்கள் உறுதியான மனதைத் தாக்கக்கூடும். ஆனால், எவ்வித காரணத்தின் நிமித்தமும் நீங்கள் உண்மைத் தனத்தினதும் நன்மைத் தனத்தினதும் பாதையில் நின்று தவறிப்போகக் கூடாது.

உங்கள் திவ்விய ஆசானுக்காகவும், அவருடைய திருச்சபைக்காகவும், உங்கள் சகோதரர்களுக்காகவும், உங்களுக்காகவும் நீங்கள் தேவகற்பனைகளில் நிலைதளம்பாது உறுதியாய் நிற்க வேண்டும். கிறிஸ்தவர்கள் என்ற மகிமைப்பேருக்குநீங்கள் தகைமை உடையவர்களாயிருக்க வேண்டுமாயின், நமது தேசத்தை அழிவிலிருந்து பாதுகாக்கும் பொருட்டும், ஆத்துமங்களின் இரட்சணியத்துக்காகவும், சருவேசுரனுடைய பிரமாணத்தை நிலைநாட்டுவதற்காகவும், அவருடைய மகிமைக்காகவும் நடாத்தப்படும் பெரும் போராட்டத்தில் நீங்கள் விட்டுக் கொடுக்காமல் இருக்க வேண்டும்,

இப்பிரச்சனையானது உங்கள் விசுவாசத்தின் பரீட்சிப்பாக விருக்கின்றது. ஆதிக்கிறிஸ்தவ வேதசாட்சிகள் விக்கிரகங்களுக்குத் தூபங்காட்டியிருந்தால் தங்கள் உயிரைக் காப்பாற்றியிருப்பார்கள்; ஆனால், விசுவாசத்திற்காகத் தங்கள் இரத்தத்தைச்சிந்தி மரிக்கவே விரும்பினர்

[தொடர்ச்சி 5-ம் பக்கம்]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாலகயேசுவை ஏந்திச்சென்ற பாலிய 'கிறிஸ்தோப்பர்'

இற்றைக்குச் சிலவருடங்களின்முன் சைபீரியாவிலுள்ள ஒருகாட்டில் வாஸ்லாவ்என்ற ஒருபாலியன் வசித்திருந்தான். இவன் அங்குள்ள சிறைச்சாலைக் காவலர்ஒருவரின் புதல்வன். இந்தக்காவலர் சிறைக்கைதிகளுக்கு மிகவும்நல்லவராயிருந்து, அவர்களுக்கு விலக்கப்பட்டிருந்த காரியங்களைச் செய்ய—அதாவது அந்தரங்கமாகத் திவ்வியபூசை நிறைவேற்றுவதுபோன்ற காரியங்களை அவர்கள்செய்யும்படி விட்டுக்கொடுத்துவந்தார். ஏனெனில், அவர்களில்அநேகர் குருமாராயிருந்தனர். தனதுபுதல்வன் வாஸ்லாவ் ஒருகிறீஸ்தவனாக ஞானஸ்நானம் அருளப்பட்டபோதும், கைதியான ஒருகுருவானவரால் அவன் முதல் நன்மைக்கு ஆயத்தஞ்செய்யப்படத் தொடங்கியபோதும் அவைகளைப்பற்றித்தானும் அவர்பராவாய்பண்ணவில்லை. "ஆனால்,எவருக்கும் அவைகளைப் பற்றிச்சொல்லத்துணியாதே; ஏனெனில், நீ அவ்வாறுசெய்தால் நாம் எல்லோருமே பெருஞ்சங்கடத்தில் மாட்டிக்கொள்வோம்" என்றுமாத்திரம் அவர்சொன்னார்.

நிற்க, சிறைச்சாலைக் காவலர்களெல்லாருமே அத்துணை இலகுவில் விட்டுக் கொடுக்கக் கூடியவர்கள்அல்ல, அவர்களில் அந்திரேவெவ் என்றஒருவன் அதிகபலமுடையவாலிபன். அவன் கிறீஸ்தவர்களை மிகவும்பகைத்துவந்தான். அதற்குக்காரணம், அவர்கள் எப்போதாவது அவனுக்குயாதும் தீங்கிழைத்ததல்ல. ஆனால்,அவன் ஓர் பாலியனாக இருந்ததுமுதல் அவர்களைப்பற்றி இல்லாதபொல்லாத பொய்களெல்லாம் அவனுக்குக் கற்பிக்கப்பட்டுவந்தன. அவர்கள் குரூரகுணம் உடையவர்களென்றும், பிள்ளைகள் மட்டிலும், ஏழைகள்மட்டிலும் கொடுமையாகநடந்து கொள்கிறவர்களென்றும் அவன் கேள்விப்பட்டிருந்தான். ஆனால்,அவனோ ஏழைகள் மட்டில் மிகுந்தபட்சமாயிருந்தான். பிள்ளைகளை மிகவும்நேசித்தான். அவன் கிறீஸ்துநாதரைப்பற்றிய உண்மையைமாத்திரம் அறிந்திருந்தால் உள்ளபடியே அவனை ஓர்அர்ச்சியசிட்டவனாக்கக் கூடிய குணாதிசயங்களையெல்லாம் அவன்கொண்டிருந்தான்.

ஒருநாள் இரகசியமாகச் செய்தி அறிவிக்கும் ஒருவன் ஆங்காங்கு சுற்றித்திரிந்து, காட்டிலே திவ்விய பூசை நிறைவேறப்போவதாகத் தெரிவித்துக்கொண்டுபோனான். சிலர் பூசைக்குவேண்டிய கொஞ்சம்வெள்ளை அப்பத்தைக் களவிலே கொண்டுவந்து சேர்த்தனர். வேறுசிலர் ஒருதீதாள் நிறையத் திராட்சாசம் கொண்டுவந்தனர் இவைகளைத்தயார்செய்ய வாரக்கணக்கிலே பிடித்தது. இப்போது பூசைநிறைவேறப்போகிறது. இல்லை, அது நிறைவேறிவிட்டது. பலிபீடம் தறித்துவிழுத்தப்பட்ட ஒருபெரிய மரத்தின் அடிப்பாகம். பலிபீடக்கல் அங்கே நிலத்திலிருந்துஎடுத்த ஒருகல். குருவானவரும், தியாக்கோன்மாரும், வாஸ்லாவ்என்ற பாலியனைப்போல இரகசியமாகக் கிறீஸ்தவர்களான மற்றும்சிலரும் திருவழிபாட்டுத் திவ்வியகீதங்களைக் காட்டின் வெவ்வேறு பகுதிகளிலிருந்து இன்பகரமாகப் பாடினார்கள். அதனால் அவர்களின்தொனிகள் கானகத்துமரங்களின் மத்தியிலிருந்து சம்மனசுகளே பாடுவதுபோன்று நாலாபுறங்களிலுமிருந்து தேவசந்நிதானம்மட்டாய் எழுந்தன. கைதிகள் பலமுறையும் செய்வதுபோல் தாங்கள்வேலைசெய்கையில் பாடுகிறார்களென்றுதான் சிறைக் காவலர்கள் அப்போது எண்ணிக் கொண்டார்கள்.

பூசையின்பின் வாஸ்லாவுக்கு அதிசயசம்பவமொன்று நிகழ்ந்தது. அவனைக் குருவானவர் அழைத்து "வாஸ்லாவ், இங்கிருந்து ஒருமைல் தூரத்துக்கப்பாலுள்ள சிலகுடிசைகளிலே சிறையிருந்துவருகின்ற கன்னியாஸ்திரிமாரை உனக்குத்தெரியும் அல்லவா?"

"ஆம், சுவாமி, எங்கே அவர்கள் இருக்கிறார்களென்று எனக்குத் தெரியும். ஆனால்,அவர்கள் ஒருபோதும் வெளி கொள்வதில்லையே."

"ஆம், அவர்கள்வெளிகொள்ள அனுமதிக்கப்படுவதில்லை. அதனால்நீ அவர்களிடம்போகவேண்டும். அவர்களுக்குத் தேவநற்கருணை கொண்டுபோக வேண்டும்."

வாஸ்லாவ் ஆச்சரியத்துடன் "நானா சுவாமி, ஆனால்,நான் ஒருகுருவானவர்அல்லவே. ஆண்டவரின் திருச்சரீரத்தைநான் தொடத்தானும் கூடாதே."

"அந்தக்கன்னிகாமடத்துக்கு நான் போகமுயன்றால் சந்தேகிக்கப்பட்டுத் தடுத்துவிடப்படுவேன். அத்துடன் தண்டிக்கவும்படுவேன். வளர்ந்தவர்கள் எவர்போனாலும் இப்படித்தான்நடக்கும். ஆனால், நீஒருபாலியன். அதிலும் ஒருசிறைச்சாலைக் காவலரின் மகன். அதனால் நீபோவதில் யாதுசந்தேகமும் இருக்கமாட்டாது. மேலும்இது ஒரு வேதகலாபனைகாலம். "கற்றக்கோம்ஸ்" எனப்படும் சுரங்கஅறைகளில் ஆதிக்கிறீஸ்தவர்கள்காலத்தில் பாலியர்கள் செய்ததுபோல நீசெய்யவேண்டுமென்று நான்சொன்னால் தேவநற்கருணையை நீ எடுத்துச்செல்லலாம்." இவ்விதம்சொல்லிவிட்டுக் குருவானவர் அபிஷேகஞ் செய்யப்பெற்ற திருஅப்பத்தின் சிறுதுண்டுகளை ஒருவெள்ளைச் சணற்புடவையால் சுற்றிக்கட்டி வாஸ்லாவின் இருதயத்திற்குமேலாக அவனுடைய சட்டையினுள் இறுகபூட்டிக் கட்டி, நட்சத்திரங்கள் பிரகாசித்துக் கொண்டிருக்கும்போது புறப்பட்டுப் போகுமாறு அவனிடம்கூறினார்.

வாஸ்லாவ் புறப்பட்டபொழுது வழிநீளமுள்ள இராட்சதவிருட்சங்கள் உறைபனியால்வெண்மயமாகக் காட்சியளித்தன. அவனுடைய தலைக்குமேல் ஆயிரமாயிரம் மைலுக்கப்பால் உறைபனியால்வெண்மைநிறமான மரக்கிளைகளிலிருந்து பழங்கள்தொங்குவதுபோல நட்சத்திரங்களின் எரிவடங்கள் தொங்கிக்கொண்டிருந்தன. அவன் தனதுமார்பின்மேல் சிலுவைவடிவமாகத் தன்னுடையகரங்களை வைத்துக் கொண்டு, "யேசுவின்திருஇருதயமே, உம்மிலே என்நம்பிக்கையெல்லாம் வைக்கிறேன்" என்று மெதுவாகச் சொல்லிக்கொண்டான். அஃது ஒரு விசித்திரமான இரவாயிருந்தது. பனிப்படலத்தின்மேல் அவனது அடிச்சுவடுகள் சப்தமின்றியிருந்தன. அவனுடையஇருதயத்தில் அமரிக்கையும், தூய்மையும், அமைதியும் குடிகொண்டிருந்தன. தான்கண்டுபிடிக்கப் படுவதையிட்டுத்தானும் அவன்பயப்பிராந்தி கொள்ளவில்லை. தலைகவிழ்ந்த அவனுடைய கண்களுக்குப்பின்னால் காங்கையான விளக்கொன்று எரிவதுபோலத் தோன்றியது. அதனால் அபாயங்களைப் பற்றி அவன் சிந்திக்கமுடியாதிருந்தது.

அங்ஙனமாக, அன்றிரவு முன் சொன்ன அந்திரேவெவ்தான் காவல் செய்துகொண்டிருந்தான். உற்சாகம் பிறக்கும்படியாய் முதல் ஒருபாதைக்கும், பிறகு மற்றொரு பாதைக்கும் போவதும், திரும்புவதுமாய் மேலும் கீழுமாக நடமாடிக்கொண்டு தப்பியோடமுயலுகின்ற சிறைக்கைதிகளைக் கூர்ந்து கவனித்தவண்ணம் இருந்தான். அப்போது திடீரெனப் பனிப்படலத்தின்மேல் ஒருசிறியநிழல் விழக்கண்டான். அந்தநிழலும் நீண்டமரநிழல்களுக்கிடையே அசைந்துகொண்டிருக்கக் கண்டான். கண்டதும் ஒருகால் அதனை விறைத்துப்பார்த்தான். தனது கைத்துப்பாக்கியைக் கையிலெடுக்க உத்தேசித்தான். அப்போது வாஸ்லாவ் தனது கைகள்இரண்டும் கட்டியபடியே கீழ்நோக்கிய கண்களுடன் வந்துகொண்டிருக்கக் கண்டான். இந்த அகாலநேரத்திலே, எவரும்வரத்துணியாத வழியாலே அவன்வரக்கண்டதும் அந்திரேவெவுக்குச் சட்டெனக் கடுங்கோபம் பிறந்தது. பூனைக்குக் கோபம் வரும்போது அதன்மயிரைப்போன்று அவனுடைய பிடரிமயிர்கள் சிலிர்த்தன. அப்பாலியனைப் பாய்ந்துபோய்ப் பிடிக்க விரைந்துசென்றான்.

அங்ஙனம் சென்றவன் என்ன அதிசயம், சட்டெனப் பின்வாங்கிச் சிம்மசொற்பனம் கண்டவன்போல் திகைத்துப்போய் அந்தப்படியே நின்றான். அங்கே அவன்கண்டகாட்சி அவனைத் திக்பிரமைகொள்ள வைத்தது. அந்தக் காட்சியால் தான்ஏதோ கனவுலகில்நிற்பதாகக் கருதினான். தன்கண்களையே நம்பாதவன்போல் ஒருமுறைக்குப் பலமுறை கூர்ந்துபார்த்தான். அவன்கண்ட அந்தக்காட்சிதான் என்ன? பாலியன் வாஸ்லாவுடன் மற்றொருபிள்ளையை— நட்சத்திரஒளியிலே பனிக்கட்டியைப் போலும் பிரபையான ஒருசிறிய முகத்துடன்கூடிய அதிகம்சிறியபாலியர்ஒருவரைக்கண்ட அற்புதகாட்சியே. வாஸ்லாவ் அப்பாலியரைத் தனதுகரங்களில் ஏந்திக்கொண்டுவந்தான். அந்திரேவெவ் அச்சிறியபாலியரை முன்னொருபோதுமே கண்டிருக்கவில்லை. வாஸ்லாவ் அப்பாலியரை ஏன் தூக்கிக்கொண்டு வருகிறான் என்பதுமாத்திரமல்ல, அப்பாலியரின் பாதங்கள் பாதரட்சைகளின்றியிருந்ததும், அவற்றிலிருந்து இரத்தம் வடிந்துகொண்டிருந்ததும் அவனுக்கு ஆச்சரியத்தின்மேல் ஆச்சரியத்தை உண்டுபண்ணின. அப்போது அவன் எல்லாவற்றையும் மறந்தவனாய் இந்தச் சின்னஞ்சிறிய அந்நியபாலியர் யாராய் இருக்கலாம்? வாஸ்லாவ் இந்த இராவேளையில் ஏன் அப்பாலியருடன் வெளியேபுறப்பட்டு வந்திருக்கிறான்? என்று சிந்தித்தபடியே அவர்களண்டை சென்றான். அன்பாதரவான மொழிகளால் அவ்விடத்திலே அவர்களைநிறுத்தினான். அதன்மேல்,

"வாஸ்லாவ், இந்தச் சிறு பாலியர் உனக்கு அதிகம் பாரமாய் இருக்கிறார் அல்லவா? ஏன் அவருக்குச் சப்பாத்துகள் இல்லை?"

"அவர் மிகவும் ஏழை ஐயா."

"ஏன் அவர்பாதங்களிலிருந்து இரத்தம் பெருகுகின்றது?"

"நேசத்துக்காக!"

"அப்போ அவர்ஒருமறியற்காரனா?"

"ஆம், அவர் ஒரு மறியற்காரன்."

"அப்படியானால் நானே உனக்காக அவரைத் தூக்கிச்செல்லுகிறேன்."

"ஓ! இல்லை, இல்லை, ஒருபோதும் இல்லை; நான் அந்தக் கன்னியாஸ்திரிமாரிடம் கொண்டுபோய்ச் சேர்க்கிறவரையில் என்னிடமிருந்து ஒருவருமே அவரை எடுத்துச்செல்ல முடியாது" என்று வாஸ்லவ் உரத்துக்கூறினான்.

அந்திரேவெவ் சிறிதுவேளை கவலையுடன் சிந்தித்துவிட்டு, "ஆம், அவர்கள் இந்தச் சிறுவரின் பாதங்களைக் கழுவி அவருக்குச் சூடுவரப்பண்ணி, உணவூட்டுவார்கள்; ஆம், அவர் நேசிக்கப்படவேண்டியவராகையால் அவர்கள் அவரை நேசிப்பார்களென்று நிச்சயமாக நான்நினைக்கிறேன்" எனப் பகர்ந்தான். அவ்விதம் பகர்ந்துவிட்டு, அந்தப்படியே வாஸ்லாவை ஒரே தூக்காய்த் தூக்கினான். தனது பலம்

(தொடர்ச்சி 8-ம் பக்கம்)

# கத்தோலிக்கசேவைத் தலைவிக்கு

## முத்திப்பேறுபெற்ற பட்டவிசாரணை

இத்தாலிய கத்தோலிக்கசேவையில் இளம்பெண்மணிகளின்பிரிவை அடியிட்டவளான ஆர்மிதா பறெல்லி அம்மாளின் முத்திப்பேறுபெற்ற பட்டத்திற்கான விசாரணையை மிலான்நகர் அதிமேற்றிராசனம் ஆரம்பித்திருக்கிறது. இந்தவிசாரணை மிலான்நகர் அதிமேற்றிராணியாரான கருதினால் ஜியோவான்னி மொந்தினி ஆண்டவர் சமூகமாக மேற்றிராசன நீதிமன்றத்தில் ஆரம்பிக்கப்படலாயிற்று.

ஆர்மிதா பறெல்லி மிலான்நகரிலே 1882-ம் ஆண்டு பிறந்து, இற்றைக்கு எட்டுவருடங்களின்முன் — அதாவது 1952-ம்ஆண்டு ஆவணிமாதம் 15-ந் திகதியன்று பரமபதமடைந்தாள். இவளுடைய சீவியகாலத்திலும், சமய தொண்டுகளிலும் அதிகமான பகுதி மிலான்நகர் அதிமேற்றிராணியாராயிருந்த கருதினால் அந்திரேயா கார்லோ பெறாரி ஆண்டவர், மிலான்நகரிலே திருஇருதயநாதரின் சர்வகலாசாலையை உடனின்று அடியிட்டவரான விகோ செக்கி எனும் இருவருடனுமே சம்பந்தப்பட்டிருந்தது. இவர்களுக்குமே முத்திப்பேறுபெற்றபட்டம் அருளப்படுவதற்கான ஆலோசனை நடைபெற்றுவருகிறது.

முதலாவது உலகயுத்தம் நடந்த காலத்திலே இத்தாலிய ஆயுதபலங்களைத் திருஇருதய ஆண்டவருக்கு நேர்ந்தொப்புக்கொடுப்பதற்கான ஏற்பாடுகளை ஒழுங்குசெய்வதில் மிலான் நகர கத்தோலிக்க சர்வகலாசாலையை உடனின்று அடியிட்ட பிரான்சிஸ்கன் சபைக்குருவரான வண. அகஸ்ரினோ கெமெலி சுவாமியாருக்குத் துணைசெய்தபோதுதான் 1916-ம் ஆண்டு ஆர்மிதா பறெல்லி கத்தோலிக்கசேவையில் ஊக்கமானவாழ்க்கையைத் தொடக்கினாள். 1918-ம் ஆண்டு கருதினால் பெறாரி ஆண்டவர் மிலான் நகர்மேற்றிராசனத்திலே இளம்பெண்மணிகளின் கத்தோலிக்க ஸ்தாபனம் ஒன்றை அமைக்கும் பணியை இவளிடம் ஒப்படைத்தார். அப்போது இவளுடைய தொண்டு அத்துணைவெற்றிகரமாய் நடந்தமையால் அத்தமாதிரியான சேவைஸ்தாபனங்களை இத்தாலியதேச முழுவதிலும் அமைக்கும்படியாகப் 15-ம் ஆசீர்வாதப்பாப்பானவர் அதே வருடத்தில்தானே இவருக்குஉத்தரவிட்டார் இந்தஸ்தாபனத்துக்கு இவள் 26 வருடம் தலைமைவகித்திருந்தாள். 1946-ம்ஆண்டு 12-ம் பத்திநாதபாப்பானவர் இத்தாலிய கத்தோலிக்கசேவையின் பிரதமஉதவித்தலைவியாக இவளைநியமனஞ்செய்தார்.

மிலான்நகர கத்தோலிக்க சர்வகலாசாலைக்கு நிதிசேகரிப்பதிலும் இவள் பொறுப்பாளியாயிருந்தாள். அச்சர்வகலாசாலைச் சிற்றாலய நிலவறையிலேயே இவள் அடக்கஞ்செய்யப்பட்டிருக்கிறாள். 1928-ம்ஆண்டு நற்கருணைநாதருக்கு நிந்தைப்பரிகாரச் செபங்கள் சொல்வதையும், குடும்ப நற்கருணை ஆராதனையையும் பரப்புவதான கிறீஸ்துஇராசாவின் ஸ்தாபனத்தை இவளே அடியிடலானாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 400 வருடங்களுக்குமுந்திய தீர்க்கதரிசனம்

## அர்ச். சூசையப்பர் ஸ்துதிக்கப்படுவாராக!

(முன் தொடர்ச்சி)

இப்போது அர்ச். சூசையப்பரின் வல்லபமிக்க பாதுகாவல் அகிலமுழுவதுமே பரந்துவிட்டது. அங்ஙனமாக 1870-ம் ஆண்டிலுமே உலகிலுள்ள ஒவ்வொரு நாட்டிலும் ஏதோஒருமாதிரியில் கம்யூனிஸ்ததீமையைப் பரப்பும் வேகம் ஆரம்பமாயிற்று. அவ்வருடத்திலே எங்கெல்ஸ்என் பவன் லண்டன்நகரிலே தனதுநண்பனை காள் மாக்ஸுடன் சேர்ந்துகொண்டான். அங்கேஇருவரும் தாங்கள் திட்டமிட்டமாதிரியான லோகாயதத்தைப் பரப்புமாறு அயராது உழைக்கவிருந்தார்கள். இவர்களின் லோகாயதம்என்பது சகலமும்இடையறுது மாற்றமடைகிறதென்றும், மாறுபடுகிறதென்றும், கடவுளே இல்லையென்றும் கூறுகின்றது.

நிற்க, 1870-ம் ஆண்டாகிய அதேவருடம் சித்திரைமாதம் 22-ந்திகதியன்று ருஷியாவின் மத்தியிலுள்ள சிம்பேர்ஸ்க்என்ற பட்டினத்தில் விலாடிமிர் உல்யானவ்என்ற ஒருகுழந்தைபிறந்து மனிதனுகவளர்ந்ததும் மாக்ஸ், எங்கெல்ஸ் எனும் இருவரது கொள்கையையும் நடைமுறைக்குக் கொண்டுவரவும், உலகமுழுவதும் பரப்பவும் முன்வந்தான். இவன்தான் நிக்கொலாய் லெனின்

1889-ம்ஆண்டு லெனின் மாக்ஸியத்தைக் கருத்தாகப் படிக்கத் தொடங்கினன். அதன்மேல் மாக்ஸிய தத்துவங்களை முதலில் ருஷியாவிலும், முடிவில் உலகமுழுவதிலும் பரப்ப வேண்டுமெனக் கருத்துக்கொண்டான். தனதுவாழ்க்கையின் இந்தஆரம்பத்தில்தானும் தான் ஓர் புரட்சிவாதியென்று அவன் தன்னில் உணர்ந்தான். இதற்கு இருவருடங்களின்முன் மாணவர்குழப்பம் ஒன்றில் கலந்துகொண்டதற்காக இவன் காஸான்சர்வகலாசாலையிலிருந்து துரத்தப்பட்டான். சில வருடங்களின்பின் ஸ்திரமான ஓர்மாக்ஸியனுகிச் சோஷலிஸ்த ஜனநாயக கட்சியென்ற புரட்சிவாதகுழுவின் தலைவனுகவிருந்தான்.

இந்தச் சோஷலிஸ்த ஜனநாயகவாதகொள்கைகள் 1889-ம் ஆண்டில்தானே பரீஸ்நகரில் நடந்தேறிய இரண்டாவது சர்வதேச மகாநாட்டில் அங்கீகரிக்கப்படலாயின. இந்தமகாநாட்டின் நோக்கம் பிரான்ஸிய அரசியற்புரட்சியின் நூறும்ஆண்டு நிறைவைக் கொண்டாடுவதேயென்று அதன்தலைவர்கள் கூறிக்கொண்டார்கள். ஆனல், நாஸ்திககம்யூனிஸ்த தத்துவங்களை இன்னும அதிகமாகப் பரப்புவதே அதன் முக்கிய நோக்கமாயிருந்தது.

1889-ம்ஆண்டாகிய அதேவருடத்தில்தானே நாஸ்திககம்யூனிஸத்தின் அச்சுறுத்துதல் வளர்ந்துகொண்டு வந்தமையால் 13-ம் சிங்கராயர்என்ற மற்ருேர்பெரிய பாப்பானவர் சூசையப்பர் பக்கமாகத் திரும்பினர். அதேவருடம் ஆவணிமாதம் 15-ந்திகதியன்று அவர்விடுத்த தமது சாதாரணநிருபத்தில், ஆரம்பத்திலிருந்தே அர்ச். சூசையப்பர் சாதாரண திருச்சபையின்பரிபாலகராயிருக்கச் சர்வேசுரனல் ஏன் தெரிந்துகொள்ளப்பட்டார் என்பதற்கான நியாயங்களை வரையறுத்துக் காட்டலாயினர்.

நசரேத்தூரில்

"தேவதாயாரின் மகத்துவமானது உள்ளபடியே சிருட்டிக்கப்பட்டஎதுவும் அவருக்குமேலாய் இருக்கமுடியாத அத்துணைமேலானது. ஆனல், சூசையப்பர் தமது திருமணத்தினலே அவருடன் இணைக்கப்பட்டார். மற்றெல்லாச் சிருட்டிகளையும் கடந்திருப்பதாகிய தேவதாயாரது மகத்துவத்தின் உந்நதத்துக்கு மற்றெவராலுமே அணுகமுடியாத அதிகம் சமீபத்தில் வருகிறவர் சூசையப்பரே என்பதையிட்டுச் சந்தேகப்பட இடமேயில்லை. ஒருதந்தைக்குரிய அதிகாரத்துடன் காணப்படுவாரைப்போன்று சூசையப்பர் ஆட்சிசெய்த திருக்குடும்பமானது முளைகொண்டெழுந்த பாலியதிருச்சபையின் ஆரம்பத்தைத் தன்னிலேயேகொண்டதாயிருந்தது. பரிசுத்த கன்னிமரியாய் யேசுக்கிறீஸ்துநாதரின் தாயாராய் இருப்பதுபோல் கல்வாரிமலையிலே தாம்பெற்றருளிய கிறீஸ்தவர்கள் எல்லோரினதும் தாயாராகவிருக்கின்ருள்..... மூத். பிதாப்பிதாவாகிய சூசையப்பர் தம்மிடம் விசேஷவிதமாக நம்பி ஒப்படைக்கப் பட்டவர்களைப் போன்று திருச்சபையை உருவாக்குகின்ற கிறீஸ்தவர்களாகிய சனசாகியத்தைக் கடாட்சித்துக் கண்காணிக்க வேண்டியவர் ....... அதனல் நசரேத்தூர்க் குடும்பத்தின் தேவைகளையெல்லாம்சூசையப்பர் வழமையிலேஉதவிப் பக்தி வினயத்துடன் அதனைப் பராமரித்துவந்தார். ஆகவே, இப்பொழுதும் மோட்சத்திலிருந்து கிறீஸ்துநாதரது முழுத்திருச்சபைக்கும் தம்முடைய பாதுகாப்பையும், பராமரிக்கையையும் விஸ்தரிக்கவேண்டியவர் .........." என்று 13-ம் சிங்கராயபாப்பானவர் தமது சாதாரணநிருபத்தில் எழுதியிருந்தார்.

(வளரும்)

---

### கத்தோலிக்க தொழிலாளரின் மகாநாடு

ஜேர்மனியிலே மூனிச்நகரில் வருகிற ஆடிமாதம் 31-ந்திகதியன்று ஆரம்பமாகவிருக்கும் சர்வதேச சற்பிரசாத மகாநாட்டின்போது உலக கத்தோலிக்க தொழிலாளரின் மகாநாடுஒன்றும் பேராய் நடந்தேறவிருக்கிறது. கிறீஸ்தவதொழிலாளர் இயக்கங்களின் சர்வதேச சம்மேளன ஆதரவில் நடக்கவிருக்கும் இந்தமகாநாட்டின்விஷயம் "திவ்வியசற்பிரசாதம் சம்பந்தப்பட்டமட்டில் தொழிலும், தொழிலாளியும்" என்பதே. மகாநாட்டின்போது திருச்சபையின் சமூகபோதனைகள்பற்றிய வாதவிவாதங்களில் 20,000 கத்தோலிக்க தொழிலாளர் கலந்துகொள்வார்களென எதிர்பார்க்கப்படுகிறது.

---

### மேயராகத் தெரியப்பெற்றுள்ள குருவானவர்

பிரித்தானியதேச வேல்ஸ் நாட்டிலுள்ள லான்டோவெறி நகரின் மேயராகத் திரும்பவும் ஒருகுருவானவர் தெரியப்பெற்றிருக்கின்ருர். இவரை மேயராகத் தெரிவுசெய்தவர்கள் கத்தோலிக்கரல்ல, 'நொன்கொன்போமிஸ்ற்'என அறியப்படுகின்ற புரொட்டஸ்தாந்தர்களே. புதிய மேயரான வண. ஈறிக் கிறீன் சுவாமியார் ஏகமனதாகவே தெரியப்பெற்று நிகழும் வைகாசிமாதம் 1-ம்திகதியன்று பதவியைக் கையேற்றிருக்கின்ருர். 62வயதுடையவரானவண. கிறீன் சுவாமியார் புரொட்டஸ்தாந்தராயிருந்து மனந்திரும்பியவர். பட்டாளத்திற் சேர்ந்துகொள்வதற்குச் சிறிதுகாலத்தின்முன் கத்தோலிக்கதிருச்சபையில்சேர்ந்துகொண்டவர். முதலாவது உலக யுத்தத்திலே பிரான்ஸ்தேச வலென்சியென்னெஸ் எனுமிடத்தில் நடைபெற்றயுத்தத்தில் காட்டியதீரத்துவத்திற்காக இராணுவ மெடல் சம்மானிக்கப்பெற்றவர். 1918-ம்ஆண்டு யுத்தத்தில் காயமடைந்தார். யுத்தத்தின்பின் குருமடத்திற்சேர்ந்து படித்துக் குருவாயினர். இற்றைக்குமூன்று வருடங்களின்முன் வண. ஸ்ரான்லி வின்ஸ்சுவாமியார் அந்நகரின் மேயராக ஏகமனதாய்த் தெரியப்பெற்றிருந்தார்.

---

### நாஸ்திக பிரசாரத்திற்கான சோவியற் முறைகள்

பிறநாடுகளிலே நாஸ்திகத்தைப் பரப்புதற்கென்று சோவியற்தூதர்கள் கையாளும் முறைகளில்ஒன்றைச் சமீபத்திலே லண்டன்நகரில் குருமாரும், சாதாரண கத்தோலிககரும் அடங்கிய சிறிய குழு ஒன்று கண்டுகொள்ளலாயிற்று. கிறீஸ்துசமயத்தைத் தாக்கியும், உலகில்மனிதன் தனது இன்பவாழ்வைக் கண்டடைவதற்கு வேண்டியசாதனம் இன்றைய விஞ்ஞானமே எனத் தாபித்தும் சினிமாப்படங்களின் உதவியைக்கொண்டு சோவியற்தூதர்கள் பிரசாரஞ் செய்து வருகின்ருர்கள். அன்று லண்டன்நகரில் சமூகமாயிருந்த குழுவிற்குக் காண்பிக்கப்பட்ட மூன்று சினிமாப் படங்களிலே முதல்இரண்டும் கிறீஸ்துவேதம் பூர்வீகஅஞ்ஞான கற்பனுஇதிகாசத்திலிருந்துபரக்கஇரவலகொள்ளப்பட்ட ஓர்சமயமென்றும், வாள்முனையில் அநேகமக்கள்மீது பலவந்தமாகச் செலுத்தப்பட்ட போலிக்கொள்கை, போலிநம்பிக்கையின் ஒருகலப்பென்றும் காண்பித்து அதனை இம்சிக்கின்றன. மூன்ருவது துண்டுப்படமோ விஞ்ஞானத்தின் மகிமை பெருமையை எடுத்துக்காட்டிச் சிருட்டிப்பின் இரகசியங்களை வெளியிடுவதுபோன்று காட்சியளிக்கின்றது. இந்தப்படக் காட்சிகள் கல்வியறிவற்ற பாமரமக்களை வெகுவாகப் பாதிக்கக் கூடியனவென்பதை அவற்றைக் கண்ணுற்ற கோஷ்டியினர் ஒப்புக்கொண்டார்கள்.

---

### பாத்திமா சிறுமிமரித்த நாற்பதாம்ஆண்டு நிறைவு

பாத்திமாவிலே 1917-ம்ஆண்டு தேவதாயாரின் காட்சிபெற்ற மூன்றுபிள்ளைகளிலும் ஜாஸிந்தா மார்த்தோ மரணமடைந்த நாற்பதாவது ஆண்டுநிறைவு தினம் பாத்திமாபதி மகாதேவாலயத்திலே சென்ற மாசிமாதம் 20-ந்திகதியன்று நிறைவேறிய திவ்வியபூசைஒன்றில் நினைவு கூரப்படலாயிற்று. ஜாஸிந்தாவுடையவும், அவள்சகோதரன் பிரான்சிஸ்கோவுடையவும் முத்திப்பேறுபெற்ற பட்டத்திற்காக ஒப்புக்கொடுக்கப்பட்ட இத்திவ்வியபூசை வீய்றியாமேற்றிராசனத்திலே அவர்களது முத்திப்பேறுபெற்றபட்டவிசாரணை உபதலைவரான வண. அன்ரோனியோ பொனிபாஸியோ சுவாமியாரால் நிறைவேறியது. இவ்விருபிள்ளைகளுமே காட்சிபெற்ற சில வருடங்களின்பின் இறந்துபோனர்கள். மூன்ருவதுபிள்ளையான லூஸியா தற்போது சிஸ்றர்லூஸி எனும் நாமத்துடன் ஒருகார்மேல் சபைக் கன்னியாஸ்திரியாய் இருந்துவருகின்ருள்.

---

### வீரத்துவம்வாய்ந்த குருவானவர்

இரண்டாவது உலகயுத்தித்திலே கலங்காது ஜேர்மனியரை எதிர்த்துநின்று பிரஸ்தாபம் பெற்ற 84வயதுடைய வண. பீலிக்ஸ் கேர்சுவாமியார் பிரான்ஸிலே டிஜொன்நகர மேயராக அநேகவருடகாலம் இருந்துவருகின்ருர். சமீபத்திலே ருஷியபிரதமர் குருஷெவ் பிரான்ஸுக்கு விஜயஞ்செய்திருந்தபோது டிஜொன்நகரும் அவருக்கு ஒரு வரவேற்பு அளிக்கவிருந்தது. அந்தவரவேற்பிலே நகராதிபர் என்றமட்டில் சுவாமியார் குருவுக்குரிய தமதுநெட்டங்கியைத் தரியாதிருக்க வேண்டுமென்று ஆலோசனைகூறப்பட்டது. அப்போது இந்தவிருத்தாப்பிய குருவானவர் "ஒருபோதுமில்லை. எனது நீண்டஅங்கியை ஒருபோதுமே நான்தரியாது கைவிட்டதில்லை; ஒருநாளுக்காக — குருஷேவைச் சந்திப்பதற்காக நான் அவ்விதம் செய்யமாட்டேன்" என்று வீரத்துவமாகப் பதிலளித்தார். ஈற்றில்இவர் ருஷியபிரதமரைச்சந்திக்கப்போகவேயில்லை. பிரான்ஸிய பாராளுமன்றத்தின் "பிதா"என்று அறியப்படுகிறவர் வண. கேர்சுவாமியாரே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருநாள் அட்டவணை

**வைகாசி—1960**

29 ஞா. காலதினம் (வெ)
30 தி. காலதினம் (வெ)
31 செ. பரிசுத்த தேவமாதாவின் இராக்கினித்துவத் திருநாள் (வெ)

**ஆனி 1960.**

1 பு. அர்ச். மெரிச்சி அஞ்செலம்மாள் (வெ)
2 வி. காலதினம் (ஆரோகணத் திருநாட்பூசை) (அர்ச். மார்ச்செல் லீனியார் தோழர் ஞா.) (வெ)
3 வெ. காலதினம் (ஆரோகணத்திருநாட் பூசை) (வெ)
4 சனி. பெந்தக்கோஸ்து ஆயத்த தினம் (சி)


சத்திய வேத

# பாதுகாவலன்

1960-ம் ஆண்டு
வைகாசி 26-ந் திகதி


## தேர்தல் பிரசார ஆரம்பம்

ஆடிமாதம் 20-ந் திகதி நடந்தேறவிருக்கின்ற இலங்கையின் ஐந்தாவது பொதுத்தேர்தலிலே போட்டியிடவிருக்கும் அபேட்சகர்களின் நியமனப்பத்திரங்கள் பதிவானதைத்தொடர்ந்து சென்றஞாயிற்றுக்கிழமை தேர்தல்பிரசாரபீரங்கிகள் ஆங்காங்கு முழங்கத் தொடங்கிவிட்டன. தமிழ்ப்பகுதியிலுள்ள பெரியஅரசியற்கட்சியான தமிழரசுக்கட்சி யாழ்ப்பாணக் கோட்டைமைதானத்திலும், சிங்களப்பகுதியிலுள்ள பெரியஅரசியற்கட்சியான ஐக்கியதேசியக்கட்சி கண்டிநகரமண்டபத்திலும் அன்றுதினமே தங்கள்தேர்தல் பிரசாரங்களைத் ஆரம்பித்துள்ளன. சென்றபொதுத்தேர்தலுடன் ஒப்பிட்டுப் பார்க்கும்போது அடுத்தபொதுத்தேர்தல விஷயமாய்ச் சிலமுக்கியமாற்றங்கள் காணப்படுகின்றன.

சென்றதேர்தலில் 23அரசியற் கட்சிகள் போட்டியிட்டன. ஆனால், இந்தத்தேர்தலில் 13அரசியற்கட்சிகளே போட்டியிடுகின்றன. இம்முறை 12கட்சிகளைத் தேர்தல்கம்மிஷனர் அரசியற்கட்சிகளாக அங்கீகரித்திருந்தபோதிலும் இவைகள்பொதுத் தேர்தலுக்கு அபேட்சகர்களை நிறுத்தவில்லை. மற்றிருகட்சிகள் அரசியல்வானிலிருந்தே இன்று மறைந்துவிட்டன. சென்றபொதுத்தேர்தலில் 145தொகுதிகளிலும் 898அபேட்சகர்கள் போட்டியிட்டதற்குப்பதில் அடுத்தபொதுத்தேர்தலில் 393அபேட்சகர்களே போட்டியிடவிருக்கின்றார்கள். அதனால் இம்முறை கட்சிகளின்தொகை குறைவு. அபேட்சகர்களின் தொகையும் குறைவு. அதனால் புதியபொதுத் தேர்தலில் வாக்காளர்கள் நிம்மதியாயிருக்கவும், தம்முள் ஆய்ந்தோய்ந்து அமைதியாக வாக்களிக்கவும் வசதியேற்பட்டிருக்கிறது. இன்னும் அபேட்சகர்களின்தொகை இம்முறைகுறைந்திருப்பதானது, இந்நாட்டில் ஜனநாயகம் வளரும்படியாய் வரவேற்கத்தக்க ஓர்காரியமாகும்.

இம்முறைத்தேர்தலிலே ஐக்கிய தேசியக்கட்சி 128பேரையும், ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி 98 பேரையும், மக்கள்ஐக்கியமுன்னணிக்கட்சி 55பேரையும், லங்கா சமசமாஜகட்சி 21பேரையும், தமிழரசுக்கட்சி 21பேரையும், தமிழ்காங்கிரஸ்கட்சி 10பேரையும், கம்யூனிஸ்தகட்சி 7பேரையும், லங்கா பிரசாதந்திரவாதிக்கட்சி6பேரையும்,ஏனையகட்சிகள் ஒன்று,இரண்டு, அல்லதுமூன்று பேரையுமே அபேட்சகர்களாக நிறுத்தியிருக்கின்றன. இம்முறை சுயேச்சைகளாகப் போட்டியிடுவார் 36பேர்மாத்திரமே. ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் தலைவி திருமதி சிறிமாவோ பண்டாரநாயகா, திரு. சி. சுந்தரலிங்கம், முன்னாள் தபால்மந்திரி ஜனுப்மரிக்கார் என்பவர்கள் இம்முறை தேர்தல்போட்டியில் இறங்காததும் ஈண்டு குறிப்பிடத்தக்கது.

எத்தனை அரசியற்கட்சிகள் போட்டியிட்டபோதிலும் நமக்கு வேண்டியது நாட்டை ஒன்றுபடுத்தி ஸ்திரமான ஓர்அரசாங்கத்தை அமைக்கக்கூடிய ஒரு கட்சியேயாகும். ஆனால், நிலைமையை ஆராய்வாககவனிக்குமிடத்து அடுத்தபொதுத்தேர்தல் வலதுசாரிகளுக்கும், இடதுசாரிகளுக்குமிடையே நடைபெறும் ஒருபெரும்போட்டியாகவே இருக்கும்போல் தோற்றுகிறது. அவ்வாருயின் வாக்காளர்கள் வலதுசாரிக்கட்சிகளிடம் ஆட்சிப் பொறுப்பை ஒப்படைப்பார்களா? அன்றேல் இடதுசாரிக் கட்சிகளிடம் அந்தப்பொறுப்பை ஒப்படைப்பார்களா? அல்லது சென்றபங்குனிமாதப் பொதுத்தேர்தலில்போன்று நிச்சயமற்ற ஸ்திரமற்ற ஒருநிலைமையைத்தான் உருவாக்கிவிடுவார்களா? அதனால் அரசியற் தலைவர்கள்சிலர் எண்ணுகிறபடி, மற்றொருபொதுத்தேர்தல் மீண்டும்நடைபெறக்கூடிய ஒரு சூழ்நிலை ஏற்படுமா?

---

### யாழ்ப்பாண விளையாட்டு அரங்கு

யாழ்ப்பாணநகர விளையாட்டு அரங்கையும், நீச்சல்தடாகத்தையும் அமைப்பதற்கென்று நிதிசேகரிக்கும் நோக்கமாக "யாழ்விநோத காணிவல்" என்றபெயரில் மற்றுமோர் களியாட்ட விழாவை நடத்துவதென்று மேயர் அல்பிறெட் துரையப்பா அவர்களின் தலைமையில் சென்றபுதன்கிழமை நகர மண்டபத்தில் நடந்தகூட்டம்ஒன்றில் தீர்மானமாயிருக்கிறது. இந்தக்காணிவல் ஆவணிமாதம் 27-ந் திகதி ஆரம்பமாகுமெனத் தெரியவருகிறது.

### சயரோக தடுப்புஇயக்கம்

வடமாகாணத்தில் சயரோகம் பரவிக்கொண்டுவருகிறது; இதைத்தடுப்பதற்கு உடனடியாகத் தீவிரநடவடிக்கை ஆரம்பிக்கப்படவேண்டும்; சுகாதாரம்பற்றியவிதிகளை மக்களுக்குப் போதிப்பதன்மூலந்தான் சயரோகத்தைத் தடுத்துவைக்கமுடியும்; சயரோகத் தடைஇயக்கத்தை மாணவர்களிடையே பரப்பவேண்டியது அத்தியாவசியமென்று சுகாதாரப்பகுதி உபதலைவர் டக்றர் பி. இராசசிங்கம் அவர்கள் யாழ்ப்பாணத்திலே சென்ற சனிக்கிழமை சுகாதார பேச்சரங்கு ஒன்றை ஆரம்பித்துவைத்துப் பேசுகையில் கூறியிருக்கிறார்.

# சுவிசேஷ வியாக்கியானக் குறிப்புகள்

— B. W. J. —

## 12. திருக்குடும்ப சீவியம்

**I. எஜிப்தில் நின்று புறப்பட்டது** — மத். II. 19 - 22a.

(1) பயப்பட்டார் (மத். ii. 22) — சூசையப்பர் பயப்படப் போதிய நியாயம் இருந்தது. ஏனெனில், பெரிய ஏரோதனின் மாணத்திற்குப்பின் யூதேயாவில் பலகலாபனைகள் நடந்தது மாத்திமல்ல, அர்க்கலாவுசும், கி. பி. 6-ம் ஆண்டில் அகஸ்ரஸ் சக்கரவர்த்தியால் கோல் தேசத்திற்குத் துரத்தப்படுமட்டும் கனகொடுமைகளைச் செய்தான்.

II. **நசரேத்தில் வாசம்பண்ணினது**—மத். II. 22b-23; லூக். II. 39b-40

(2) நசரேத்து என்னும் (மத். ii. 23; லூ. ii. 39.) — திருக்குடும்பம் நசரேத்திலே வாசஞ்செய்ததைப்பற்றி மத்தேயுவும், லூக்காவும் சொல்லுகிறார்கள். ஆனால், லூக்காமாத்திரம் பாலகயேசுவின் சரீர ஞான வளர்ச்சியைப்பற்றிக் கூறுகிறார். மத்தேயுமாத்திரம் திருக்குடும்பம் அங்கே போனதற்கு மூன்று நியாயங்கள் காட்டுகிறார்: 1-வது அர்க்கலாவுசின் அதிகாரத்தின்கீழ் சீவிக்கச் சூசையப்பர் பயப்பட்டார். 2-வது சூசையப்பருக்கு நித்திரையில் எச்சரிக்கை கிடைத்தது. 3-வது தீர்க்கதரிசனம் நிறைவேறவேண்டியிருந்தது.

(3) நசரேயன் (மத். ii. 23) — இசாயாஸ் தமது தீர்க்கதரிசனத்தில் (இசா. xi. 1) மெசியாவை ஜெசேயின் "தளிர்" என்று கூப்பிடும்போது அவருக்கு எபிரேயபாஷையில் தளிரின் மொழியாகிய "நசர்" என்ற பேரைக் கொடுத்தாற்போலிருந்தது. ஆகையால், யேசு தாவீதின் குமாரனுனபடியால் இந்தத் தீர்க்கதரிசனம் காரியத்தில் நிறைவேறினது மாத்திரமல்ல, அவர் நசரேத்தில் சீவித்தபடியால் அது பேர்அளவிலும் நிறைவேறிற்று.

---

### மேற்றிராணித்துவ அபிஷேக

# 11-ம் ஆண்டு நிறைவுதினம்

மகாவந். எமதுமேற்றிராணியாண்டவர்அவர்கள் தாம் மேற்றிராணித்துவ அபிஷேகஞ்செய்யப்பெற்ற11-ம்ஆண்டு நிறைவுதினமாகிய சென்ற22-ந்திகதி ஞாயிற்றுக்கிழமைகாலை 7-30 மணிக்குக் குருமார், குருத்துவபிறதர்மார், குருமடத்துமாணவர்கள் சமேதராய் ஆசனக்கோவிலுக்கெழுந்தருளித் திவ்வியபூசை நிறைவேற்றியபோது, அஃது பிள்ளைகளின் பூசைமயமாகவே பரிமளிக்கலாயிற்று. சம்பத்திரிசியார் கல்லூரி மாணவர்களும், யாழ்ப்பாண நகரிலுள்ள பல்வேறு கத்தோலிக்க கலாசாலைகளைச்சேர்ந்த மாணவர்களும், மாணவிகளும், அவர்களின் ஆசிரியர்களும், ஆசிரியைகளும் கோவில்கொள்ளாது அங்குபெருந்திரளாகச் சமுகமளித்திருந்தமையானது பெரிதும் பக்திப்பரவசமளிக்கும் காட்சியாயிருந்தது.

ஆசனக்கோவில் பாடகிகள்குழாமின் இன்பகரமான சங்கீதவோசைகள் மத்தியிலே திவ்வியபூசையை ஆரம்பித்த ஆண்டகைஅவர்கள் சுவிசேஷத்தின்பின் உணர்ச்சிததும்பச் செய்தருளிய அருமையான பிரசங்கத்தில் அங்குசமுகமாயிருந்த பிள்ளைகளையெல்லாம் அன்புபெருகவிழித்துக் கூறியதன்பொழிப்பு வருமாறு:

திவ்வியயேசுவில் நமது மிகவும் அருமையான பிள்ளைகளே! உங்களுக்கென்றே நாம் இந்தப்பூசையை நிறைவேற்றுகிறோம். அன்பான பிள்ளைகளே! பட்சிசாலங்களைப் பாருங்கள். அவற்றிற்கு இயற்கையிலே ஒருசீவியம்உண்டு. மிருகசாதிகளைப் பாருங்கள். அவற்றிற்கும் இயற்கையிலே ஒருசீவியம்உண்டு. மனிதர்களைப் பாருங்கள். அவர்களுக்கும் இயற்கையில் ஒருசீவியம்உண்டு. ஆனால், நீங்கள் ஞானஸ்நானம்பெறும்போது உங்களிலே கடவுளின்சீவியம்ஒன்று—அதாவது ஞானச்சீவியம்ஒன்று உதயமாகின்றது உங்கள்ஆத்துமத்திலே இந்தஞானச்சீவியத்தை வளர்க்கும்படியாக உங்கள்பெற்றாரும், ஆசிரியர்களும், கன்னியாஸ்திரிமாரும், குருமாரும் உங்களுக்கு ஞான அறிவை ஊட்டி எவ்வளவோ பிரயாசப்படுகின்றார்கள். அதனால் நீங்களும் உடன் முயற்சிசெய்து இந்தஞானசீவியத்தை உங்கள் ஆத்துமத்தில் வளர்க்கப் பிரயாசப்படவேண்டும்.

பிள்ளைகளே! விசேஷமாய்ப் பன்னிருவயதுக்குமேற்பட்ட பிள்ளைகளே! நீங்கள் இந்தஇளம்வயதிலேயே உங்களில் ஞானசீவியத்தைவளர்க்க முயற்சிக்கவேண்டும். அதனால் யேசுக்கிறீஸ்துநாதரில் பக்திவைத்து—அவர் எழுந்தருளியிருக்கும் திவ்விய நற்கருணையில் மிகுந்த பக்திவைத்து, ஞாயிற்றுக்கிழமைகளில்மாத்திரமல்ல, ஒவ்வொருநாளும் மிகுந்த பயபக்தியுடன் திவ்வியநற்கருணைபெற்று, அவருடைய உதவியுடன் தேவசீவியத்தில்—அதாவது ஞானசீவியத்தில் நீங்கள் வளர்ந்துகொண்டுவரவேண்டும். ஏனெனில், யேசுக்கிறீஸ்துநாதர் இல்லாமல் வேதமில்லை, ஞானச்சீவியமில்லை. ஆம், வளர்ந்த பிள்ளைகளே! உங்களில்தான் வருங்காலதிருச்சபை தங்கியிருக்கின்றது.

யாழ்ப்பாண மேற்றிராசனத்திலே இருபதினாயிரம் கத்தோலிக்க பிள்ளைகள் இருக்கின்றார்கள். யாழ்ப்பாண நகரிலுள்ள கோவில்களில் திவ்விய பூசைப்பலி தினமும் நிறைவேறுகிறது. திவ்வியநற்கருணையைத் தினமும் பெற்றுக்கொள்ள நல்ல சந்தர்ப்பம் கிடைக்கின்றது. ஆனால், ஏனைய இடங்களில் அப்படிக் கிடைப்பதில்லை. எமது மேற்றிராசனத்தில் 450 கோவில்கள் இருக்கின்றன. ஆனால், இவைகளில் 60 கோவில்களிற்தான் திவ்வியபூசை தினமும் நிறைவேறுகிறது. அதனால், 450 கோவில்களுக்கும் 450 குருமார் இருக்கத்தக்கதாக நீங்கள் செபஞ்செய்யவேண்டும். தியாகஞ்செய்யவேண்டும். முயற்சியெடுக்கவேண்டும். உங்களிற்பலர் குருமாராக வரவேண்டும். நீங்கள் கோவிலின் பக்கமாகச் செல்லும்போது முழந்தாட்படியிட்டு, ஆண்டவரே! என்னைப்போல எத்தனையோபிள்ளைகள் திவ்வியபூசை தினமும் காண—திவ்வியநன்மை தினமும்பெற வசதியற்றிருக்கிறார்கள்; அவர்களுக்கும் இந்தப்பாக்கியம் கிடைக்கச்செய்தருளுமென்று மன்றாடிவாருங்கள். பொதுத்தேர்தல் ஒன்று நடக்கவிருக்கும் இச்சந்தர்ப்பத்திலே எமது திருவேதத்துக்கு — எமது ஞான சீவியத்துக்கு—குடும்பங்களுக்கு—பாடசாலைகளுக்கு ஒருஆபத்து ஏற்படக்கூடிய நிலைமை காணப்படுகின்றது. அதனால் நீங்கள் எல்லோரும் இந்த அபாயநிலை ஏற்படாதிருக்கும்படியாக எப்போதும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வைகாசி மாதம்

**பொதுக்கருத்து:** இளைஞர்கள் தங்கள் யௌவனகாலத்தை மதித்து வாழும்படியாக வேண்டிக்கொள்வது.

**மிஷன்கருத்து:** ஐரோப்பிய அமெரிக்க சர்வகலாசாலைகளில் கல்விகற்றுவரும் ஆசிய, ஆபிரிக்க கத்தோலிக்க மாணவர்களுக்காக மன்றாடிக்கொள்வது.

---

## காலையில் ஒப்புக்கொடுக்கும் செபம்

யேசுவின் திருஇருதயமே, நாங்கள் கட்டிக்கொள்ளும் துரோகங்களுக்குப் பரிகாரமாகவும், தேவரீர் திருப்பீடத்தில் ஓயாமல் உம்மைத்தானே பலியாகஒப்புக்கொடுக்கும் சகல கருத்துகளுக்காகவும் அடியேன் இன்றுசெய்யும் செபங்களையும், கிரியைகளையும், படுந்துன்ப வருத்தங்களையும் அர்ச்சியசிட்ட கன்னிமரியாயின் மாசில்லாத இருதயத்தின்வழியாக, உமக்கு ஒப்புக்கொடுக்கிறேன். விசேஷமாகச் சபையாருக்குக் குறிக்கப்பட்ட சகல கருத்துகளுக்காகவும், பரிசுத்த பாப்பரசர் இம்மாதத்துக்கென நியமித்த கருத்துகளுக்காகவும் அவைகளை ஒப்புக்கொடுக்கிறேன்.

---

## தொழிற்பயிற்சி வகுப்புகள்

இலங்கையின் பல்வேறுபகுதிகளிலுள்ள தொழிற்பதிவுக் காரியாலயங்களிலும் வேலைதேடிப் பதிவுசெய்துள்ள திறமைவாய்ந்த தொழிலாளருக்குக் கொழும்பிலும், யாழ்ப்பாணத்திலும், கண்டியிலும், காலியிலும் தொழிற்பயிற்சிவகுப்புகள் நடத்தப்படவிருக்கின்றன. கொழும்புத் தொழில்நுட்பக் கல்லூரியிலும், யாழ்ப்பாணம், கண்டி, காலியாதியாம் நகர்களிலுள்ள கனிஷ்ட தொழில்நுட்பக் கல்லூரிகளிலும் மோட்டார்யந்திரப்பயிற்சி, யந்திரம்பூட்டும்பயிற்சி முதலியவற்றில் இவர்களுக்குப் பயிற்சியளிக்கப்படும். தொழில்நுட்பவேலைக்கு ஆட்களில்லாத் தட்டுப்பாட்டைச் சமாளிப்பதும், வேலையற்றிருப்பவர்களுக்கு வேலைவசதியளிப்பதுமே இப்பயிற்சியின் நோக்கங்களாகும்.

## யாழ்ப்பாணமும் நியமனதினமும்

யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள பதினொருபாராளுமன்றத் தொகுதிகளுக்கும் சென்றவெள்ளிக்கிழமை 24 அபேட்சகர்கள் நியமனபத்திரம் சமர்ப்பித்திருக்கின்றனர். தமிழரசுக்கட்சி 11 தொகுதிகளுக்கும், தமிழ்காங்கிரஸ் 8 தொகுதிகளுக்கும், கம்யூனிஸ்தகட்சி 2 தொகுதிகளுக்கும், சமசமாஜகட்சி 2 தொகுதிகளுக்கும் அபேட்சகர்களை நிறுத்தியிருக்கின்றன. 24 அபேட்சகர்களிலும் ஒரேயொரு சுயேச்சை அபேட்சகர் திரு. அல்பிறெட் துரையப்பா அவர்களே. சென்ற பொதுத்தேர்தலில் சமசமாஜகட்சி 11 தொகுதிகளிலும், கம்யூனிஸ்தகட்சி 6 தொகுதிகளிலும் போட்டியிட்டிருக்க, இம்முறை தலைக்குஇரண்டாகக் குறைத்துக்கொண்டன. இம்முறை அபேட்சகர்கள் 24 பேரிலும் 11 பேர் சென்றதேர்தலில் வெற்றியீட்டியவர்கள்.

---

மன்றாடிவாருங்கள். திவ்வியபூசையில் இரண்டாயிரம் பிள்ளைகள்வரையிலே திவ்வியநன்மைபெற்றுத் தங்கள் ஞானஆயரின் கருத்துகளுக்காகவேண்டிக்கொண்டார்கள். பூசைமுடிவில் ஒவ்வொரு பாடசாலைப்பிள்ளைகளினதும்சார்பாக ஒவ்வொருவர் சென்று அவருக்கு ஞானப் பூச்செண்டுகள் அன்பளிப்புச்செய்தார்கள். ஈற்றில் ஆண்டகைஅவர்களின் ஆசியுடன் ஆண்டு நிறைவுதினவிழா பூர்த்தியாயிற்று.

# மேற்றிராணிமார்களின் கூட்டுநிருபம்

[முதலாம் பக்கத் தொடர்ச்சி]

கள். அவர்களுடைய முன்மாதிரிகை உங்களுக்கு உற்சாகமூட்டுவதாக.

### "ஆண்டவரே நாம் யாரிடம் செல்வோம்?"

உங்கள் உண்மையான ஏக ஆசானைவிட்டு உங்களை எதுவுமே பிரிக்காதிருப்பதாக. அர்ச். பேதுருவானவருடைய வாக்கியத்தைக் கொண்டு, நீங்களும் உங்களுடைய விசுவாசத்தை தெளிவாகவும், ஆர்வத்துடனும் அறிக்கையிடுவீர்களாக: "ஆண்டவரே! நாங்கள் யாரிடம் போவோம்? நித்திய சீவியத்தின் வார்த்தைகள் உம்மிடத்தில் இருக்கின்றனவே!" (அரு. 6: 69). உலகத்தைப் பாழ்குழியில்அமிழ்த்திவிடக்கங்கணங் கட்டியெழும் தப்பறை, துன்மார்க்கம் என்னும் ஆழியின் அலைகளுக்கு எதிராக உங்கள் விசுவாசம் அசைக்க முடியாத கற்பாறைபோல் உறுதியாய் நிற்பதாக.

### இந்தக் கண்ணீர்க் கணவாயில்:

தேவனுடைய வலிமைமிக்க, வல்லமையூட்டும், மாற்றியமைக்கவல்ல, அருளின் உதவியைக் கொண்டு-இவ்வருள் உங்களுக்கு எப்போதும் உண்டு.— நீங்கள் சாதிக்க முடியாத தெதுவுமில்லை என்பதை எப்போதும் மனதில் ஆழமாய்ப்பதித்து வைத்திருப்பீர்களாக. இவ்வுலக வாழ்க்கை கஷ்டங்கள் நீங்கியதாய் இருக்க முடியாதென்பதையும், லௌகிக சௌகரியமும், சுபீட்சமும் எமது வாழ்க்கையின் பிரதானகதிகள் அல்ல என்பதையும், இவ்வுலகம் எமக்குப் பரதேசமாகவும், கண்ணீர்க்கணவாயாகவும் இருக்குமென்பதையும், நீங்கள் மனதில் வைத்திருப்பீர்களாக.

### "மனிதனுக்குவரும் பிரயோசனம் என்ன?"

மிகவும் அருமையானவர்களே, உங்கள் நற்பிரதிக்கினையில் நீங்கள்நிலைத்துநிற்பதற்குக் கிறிஸ்துநாதரின் பின்வரும் பொன்மொழிகள் உங்களுக்கு ஓர்மத்தையும், சக்தியையும் அளிக்கக்கடவன: "தன் பிராணனைக் காப்பாற்றமனதாயிருக்கிறவன் அதை இழப்பான்; என்னைப்பற்றித் தன்பிராணனை இழப்பவனோ வென்றால் அதைக் கண்டடைவான். மெய்யாகவே மனிதன் உலகமெல்லாம் ஆதாயமாக்கிக் கொண்டாலும் தன் ஆத்துமம் சேதப்பட்டால் அவனுக்குப் பிரயோசனம் என்ன? அல்லது தன் ஆத்துமத்துக்கீடாக என்னத்தைக் கொடுப்பான்?" (மத். 16: 25, 26)

### வரவிருக்கும் மகிமை:

"இக்காலத்தின் துன்பதுரிதங்கள் இனிமேல் நம்மிடத்தில் வெளிப்படப் போகிற மகிமைக்குச் சரிதகைமையானவையல்ல" (உரோ. 8:18) எனும் உண்மை உங்களுக்கு ஆறுதலையும் உற்சாகத்தையும் ஊட்டுமென நம்புகின்றோம். ஏனெனில், சருவேசுரன் தாமே எங்களுடைய "கண்களில் நின்று கண்ணீர் யாவையும் துடைத்து" (காட்சி; 21: 4), முடிவற்ற சாந்தியின், அக்களிப்பின் இருப்பிடமாகிய மோட்சக வீட்டிற்கு எம்மை அழைத்துச் செல்வார். அங்கு பாவமும் நோக்காடும் ஒழிந்துபோகும்; "இனி மரணமேயிராது" (காட்சி. 21: 4)

### கிறிஸ்தவ குடும்பத்தின் இலட்சியம்:

ஈற்றில், மிகவும் அருமையானவர்களே, குடும்ப சீவியத்தைப் பற்றிய கிறிஸ்தவ படிப்பினையின் மேன்மையையும், சிறப்பையும் நீங்கள் நன்கறிவீர்கள். சருவேசுரனுடைய சிருட்டிக்கும் வல்லபத்தில் பங்கெடுக்கும் மதித்தற்கரிய கொடை பெற்றோருக்கு அளிக்கப்படுகின்றது. அர்ச். கிறிசோஸ்தம் அருளப்பர் கூறுவதுபோல, கிறிஸ்தவ தந்தையும் தாயும், "திருச்சபையின் குறுகிய பிரதியாகிய" கிறிஸ்தவ குடும்பத்தின் குருக்களாக விளங்குகின்றனர்.

ஆகவே, பரிசுத்த பிதா 12-ம் பத்திநாதர் எச்சரித்துக் கூறுவதுபோல், பிள்ளைப் பாக்கியம் நிறைந்த இல்லறவாழ்வு எவ்வழியாலும் நீக்கப்படவேண்டிய "ஓர் சமூக நோயன்று". இயற்கை நியதிகளுக்கு, அதாவது, சிருட்டிகரின் பிரமாணங்களுக்கு, உதார குணத்துடன் அமைந்து நடப்பதனாலேயே குடும்பத்தினதும், சமுதாயத்தினதும் சுகவாழ்வையும் சன்மார்க்க வாழ்வையும் நிச்சயப்படுத்தமுடியும்.

பெற்றோர் எத்தனை பிள்ளைகளைப் பெறக்கூடுமோ அத்தனை பிள்ளைகளையும் பெற்றுத் தீரவே வேண்டும் என்று சுபாவப்பிரமாணமோ, சருவேசுரனுடைய நிருபிதப் பிரமாணமோ, அவர்களைக் கட்டாயப்படுத்துவதில்லை என்பதில் எவ்வித ஐயமும் இல்லை. பற்பல சமயங்களில் பிள்ளைகளின் தொகையை மட்டுப்படுத்துதல் தன்னிலே ஒழுக்க நெறிக்கு மாறான விஷயமன்று; ஆனால் அந்நோக்கத்தை அடைவதற்குத் தகாத வழிவகைகளைக் கையாளுவதே அறநெறிக்கு மாறான விஷயமென்க. முறையான வழிவகைகள் முன் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன. அவற்றுள் பெற்றோரின் அந்தஸ்துக்கு மகத்துவத்தையும், கௌரவத்தையும், பரிசுத்தத்தையும் அளிக்கும் சுய அடக்கமே சாலச் சிறந்தது என்பதில் ஐயமே இல்லை.

கொள்ளை நோய்க்கு அஞ்சுவதுபோல் பிள்ளைகளின் தொகை பெருகுவதைக் கண்டு பீதியடைதல் சரியன்று. இதற்கு மாறாக அவர்கள் சருவேசுரனால் அளிக்கப்படுகிற பெரும் பாக்கியங்கள் என்றுணர்ந்து, சந்தோஷத்துடனும், நன்றியறிதலுடனும் வரவேற்கப்படவேண்டும். இத்தகைய மனப்பான்மை, பெற்றோரை மனக்கவலையிலும், அங்கலாய்ப்பிலுமிருந்து காப்பாற்றுகின்றது. அன்றியும், இங்ஙனம் தாயிலும் பிள்ளையிலும் பிற்காலத்தில் உள, உடல் சம்பந்தமான குறைபாடுகள் தோன்றுவதற்குக் காரணமாயிருக்கும் மனக்கவலைகளும் கஷ்டங்களும் புது உயிரின் உற்பத்தி ஸ்தானத்திலேயே நீக்கப்படுகின்றன என்று தலைமை வாய்ந்த வைத்திய நிபுணர்கள் கூறுகின்றனர். இதையே பரிசுத்த பாப்பரசரும் வற்புறுத்துகின்றார். மகவு நலனைப் பாதுகாப்பதற்கு இயற்கையோடு இணங்கி நடப்பதைப் போன்ற வேறு சிறந்த வழியேயில்லை. எனவே, பாரிய குடும்பங்கள் "சமூக நோயாய்" இருப்பதற்குப் பதிலாக, ஒரு தேசத்தின் பலத்திற்கும் சன்மார்க்க உறுதிப்பாட்டுக்கும் உத்தரவாதமளிக்கும் சாதனைகளாக அமைகின்றன.

### சமாதானமும் சௌபாக்கியமும்

பாரிய குடும்பங்களை முன்கூறியபடி நோக்கி மனப்பூர்வமாய் ஏற்றுக்கொண்டால், தனிச்சிறப்புள்ள ஒப்பற்ற மனச்சமாதானமும், அமைதியான ஆனந்தமும் உண்டாகும் என்பது திண்ணம். பாரிய குடும்பத்தோடு கூடிவரும் கஷ்டங்களுக்கு அக்குடும்பத்தில் நிலவும் சந்தோஷங்களும் ஆறுதல்களும் பெரும்பாலும் ஈடுசெய்யப் போதியனவாகும்.

பிள்ளைகள் சார்பாகப் பாரிய குடும்பங்களை அவதானித்துப் பார்த்தால், அவர்களுடைய நற்பயிற்சிக்கேற்ற சிறந்த சூழலை அவைகள் அளிப்பதுமல்லாமல், அவர்களுடைய கஷ்டமான பிற்காலச் சீவியத்துக்குத் தகுந்தவிதமாக ஆயத்தப்படுத்துவதற்கும் சிறந்த சாதனங்களாகவும் விளங்குகின்றன. இத்தகைய குடும்பங்களுக்குச் சருவேசுரன் தமது விசேஷ ஆசீர்வாதங்களாகிய குருத்துவ, துறவற பதவிகளுக்கும், பரிசுத்ததனத்துக்குமுரிய அழைத்தல்களை அருளுவது வழக்கம். பரிசுத்த 12-ம்பத்திநாதபாப்பரசர் ஒருமுறை கூறியதுபோல், இத்தகைய குடும்பங்கள் உண்மையில் "பரிசுத்ததனத்தின் சுனைகளாக" விளங்குகின்றன, என்க.

அருமையான கத்தோலிக்க பெற்றோர்களே, சருவேசுரனுடைய விசேஷ ஆசிர்வாதத்தை உங்கள்மேல்வேண்டி இந்நிருபத்தை முடிக்க விரும்புகின்றோம். உங்கள் பிள்ளைகள் இவ்வுலகில் உங்கள் ஆனந்தமாகவும், பரலோகத்தில் உங்கள் மகிமைவாய்ந்த நித்தியகிரீடமாகவும் இருப்பார்களாக!

மிகவும் அருமையானவர்களே, உங்கள் அனைவருக்கும் எங்கள் அன்புநிறை ஆசிர் அருளுகின்றோம்.

இங்ஙனம்,
கிறிஸ்து நாதரிலும், மாசில்லாத மாதாவிலும் உங்களை நேசிக்கும்,

✠ **தோமஸ் கூறே O. M. I.**
கொழும்பு அதிமேற்றிராணியார்.

✠ **என். எம். லவுதாதியோ S. J.**
காலி மேற்றிராணியார்.

✠ **எட்மன்ட் பீரிஸ் O. M. I.**
சிலாப் மேற்றிராணியார்.

✠ **இக்னேஷஸ் கிளென்னி S. J.**
திரிகோணமலை மேற்றிராணியார்.

✠ **ஜே. எமிலியானுஸ்பிள்ளை O. M. I.**
யாழ்நகர் மேற்றிராணியார்.

✠ **லீயோ நாணயக்காரர் O. S. B.**
கண்டி மேற்றிராணியார்.

இலங்கை,
25-3-60.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இளைஞர் பக்கம்

**அன்புமிக்க இளைஞர்களே !**

*1861*-ம் ஆண்டு வைகாசி மாதம் 21-ம் திகதி மார்சேல்ஸ்நகர் மேற்றிராணியாராகிய சாள்ஸ் யோசேப் இயூஜீன் மசனட் ஆண்டவர் பரம பிராப்தியான தினம். மரணிக்கும்போது இவர் அடியிட்ட சபையாகிய அமலோற்பவநாயகி குருக்கள் ( O. M. I. ) இத்தீவிலும் திரு ஊழியம் நடத்திக் கொண்டிருந்தார்கள். அத்துடன் திருக்குடும்பக் கன்னியாஸ்திரிகள் சபையின் பாதுகாவலராயுமிருந்தார்.

பிரான்சிய உயர் கோத்திரத்தில் பிறந்தவராயிருந்தவராயினும், அறிவறியவர்களுள் வறியவர்களுக்கு ஊழியம்செய்யவேண்டுமென்ற ஆசையினுல் தூண்டப்பட்டு அமலோற்பவநாயகி பரித்தியாகிகள் சபையை அடியிடலானுர். தற்போது இவர்கள் தொகை 7000. ஏறக்குறைய 300 குருமாரும் விறதர்மாரும் இலங்கையில் திருஊழியம் நடத்துகின்றனர்.

இவ்வுலக ஐஸ்வரியங்களையல்ல, பரலோக ஐஸ்வரியங்களையே தேடிப் பாடுபட நீங்களும் விரும்புவீர்களாயின், மேற்படிசபையில் குருவாய் அல்லது சந்நியாசியாய்ச் சேர்ந்து திருஊழியம் நடத்தலாம். இவ்விரண்டிற்குமே அழைத்தலில்லாவிடின், இன்னும் உலகத்தின் மத்தியிலிருந்து கொண்டு, அன்பின்மூலம் சுயநலமற்ற சேவை செய்ய உங்களுக்கு அழைப்புண்டு. விபரங்கள் விரும்பின், கீழ்க்காணும் விலாசத்திற்கு எழுதுக.

வண. சுவாமியார், அப்போஸ்தலிக்க பாடசாலை,
அர்ச். அன்னம்மாள் கோவில்,
பாண்டியந்தாழ்வு, யாழ்ப்பாணம்.

—⁂—

# இளைஞத் தோழர்களுக்கு.......

(ச. ஞதபொன்கலன்)

நாள்தோறும் நாம்பற்பல பத்திரிகைகளை, புத்தகங்களைப் படிக்கின்றேம். எமக்குப் பலதருணங்களில் அவைகளினுல் பயன்யாதுமே இல்லாமற் போகின்றது. இருந்தும் தொடர்ந்து படிக்கின்றேம். சற்றுச் சிந்திப்போமாகில் விரைவிலே பல விடயங்கள் எம்மனதைக் கவருவதாக அறிவோம். அன்றுமாலை 12—ந் திகதிவெளிவந்த "பாதுகாவலனை"ப் படித்துக் கொண்டிருந்தேன். இளைஞர் பக்கத்திற்கு வந்ததும் "இளைஞர்களே" என்ற தலைப்பின்கீழ் எழுதப்பட்டிருந்தபாட்டு என்னைச்சிறிது கவர்ந்தது. அப்பாட்டிலே விசேஷமாக முதற்பந்தியிலே அரும்பெரும் படிப்பினைகள்பல தெள்ளிய நடையிலே தெளிவாய்த் தொனிப்பதை அவதானித்தேன். அதோடு என் மனம் நின்றுவிடவில்லை. தேன்மலரைச்சுற்றி வண்டுகள் சுழல்வதைப் போல்எனதுசிந்தனையும் சுழன்றது. எனது எண்ணஅலைகளெல்லாம் ஒவ்வொன்ருக அலசிஆராய்ந்தன. அதன் விளைவுதான் எனதுசிறிய இவ்விரிவுரை.

" இளைஞர்களே! நற்தோழர்களே!
இன்பமுடன் நாம்
சளைக்காது ஆற்றவேண்டிய
கருமங்கள் பற்பல
இறைவனடி தொழுது
கடமையிலே கண்ணியமாய்
மறைநூல் வழிநின்றுலகில்
அறம் காத்திடவேண்டும்"

முதல்முதல் இதைஇவ்வளவு தெளிவாய் எழுதியவர்க்கு எனதுநன்றி. இளைஞர்களே என்றுஅழைத்தவர் அத்துடன் நின்றுவிடாது நற்தோழர்களேஎன்று கனிவாக அழைக்கின்றுர். எனவே, முதன்முதல் இளைஞர்களாகியநாம் சற்குணராய்த் திகழவேண்டும். அதுவேஎமது ஒரே இலட்சியமாக அமையவேண்டும்.

எம்மைச்சுற்றி எத்தனைஊழல்கள் இருந்தபோதிலும் அத்தனையையும் நாம் சமாளிக்கும் சக்தியுடையவர்களாக இருத்தல்வேண்டும். எம்மை நாடிவரும் தீயகுணங்களை விரைவிலே அகற்றவேண்டும். இன்னும் நற்குணங்கள் பலவற்றைப் பண்படுத்தவேண்டும். இப்பாட்டை இயற்றியவர் ஆற்றவேண்டிய கருமங்கள் பற்பலஇருக்கின்றனஎன்று உரைத்ததோடு மாத்திரம் நின்றுவிடாது அவற்றை நாம் இன்பமுடனும், சளைக்காமலும் ஆற்றவேண்டுமெனக் கூறுகிருர். உண்மைதான் தோழர்களே. இளைஞராகிய எம்மேல் சுமத்தப்பட்டிருக்கும் கடமைகளோ பல. எதிர்காலச் சமுதாயத்திற்கு வழிவகுப்பது எம்கடனே. இக்கடமைகளையெல்லாம்களைப்பின்றியும், சந்தோஷமாயும், வீரத்துடனும் ஆற்றுவது எம்கடனே.

இன்னும் நாம் படைத்தவனிற் பக்தியுள்ளவர்களாக இருக்கவேண்டும். எவ்விடயத்தைத் தொடங்கினும் அவனின்நாமம் எம்மனதிலே இருக்கவேண்டும். இன்னும் கடமையைக் கவனமாகப் புரிந்துவருதல் எம்கண்ணியமுள்ள ஓர்கடமையாக இருத்தல்வேண்டும். இதன்பயனுய் நாம் நமக்கும், எமது அயலவனுக்கும் தொண்டர்களாக அமைவோம். ஈற்றிலே மறைநூலாகிய எம்யேசுவின் பாதையைக் கைக்கொண்டு தானதர்மம்போன்ற நற்கிருத்தியங்களைக் கண்ணியமாய்க் காத்துநடக்க வேண்டும். இவையே இலட்சிய வாழ்வின் அடிப்படை உண்மைகள்.

## புனிதர் மொழிகள்

- யார் தன் இச்சைகளை அடக்கி வாழ்கிருனே, அவனே உலகை மேற்கொண்டவனுவான்.
  — அர்ச். சாமிநாதர்
- எல்லோருடனும் பொறுமையாய் நடந்துகொள். உன்னையிட்டோ அதிக கவனமாயிரு.
  — அர்ச். பிரான்சீஸ் சலேசியார்.
- பெரிய காரியங்களைச் செய்வதற்கே நான் பிறந்தேன்.
  —அர்ச். ஸ்ரனிஸ்லாஸ்
- பூரித்த உள்ளம், எவரிலும் பார்க்க வேகமாய்ப் பரிசுத்ததனத்தில் முன்னேறும்.
  — அர்ச். பிலிப்பு

* * *

பேசுவது கொஞ்சமாயும், கேட்பது அதிகமாயும் இருப்பதுநலம்.

தேவனைமட்டும் ஒருவன் தன்மனதில் வைத்திருப்பானுகில், அவனுக்கு வேருென்றும் தேவையில்லை.
—அர்ச். இஞ்ஞாசியார் லொயோலா.

# "கலிலேயமனிதரே! நீங்கள்ஏன் வானத்தைஅண்ணுர்ந்து பார்த்துக்கொண் டிருக்கிறீர்கள்......"

நெஞ்சைக் கசக்கிப்பிழியும்வண்ணம் நிஷ்டூரர் தம்மைவாதிக்கையில் தமக்காக உள்ளம்நொந்து வருந்திய தம்அருமைச் சீஷர்களைத் தம்உத்தானத்தின்பின் நாற்பதுநாட்கள் காட்சியளித்து மகிழ்வூட்டித் தேற்றியதின். பின் நாற்பதாம்நாள் ஒலிவமலையடிவாரத்தில் எல்லோரையும் ஆசீர்வதித்தவண்ணம், நம் திவ்வியஇரட்சகர் பரலோகத்திற்கு ஆரோகணமாயினுர் இவ்வற்புத காட்சியைக்கண்டு ஆச்சரியவசத்தினராய் வானத்தையே வெறித்துப் பார்த்துக்கொண் டிருந்தவர்களுக்குத் தேவதூதன் காட்சியளித்து, "கலிலேயமனிதரே! நீங்கள் ஏன் வானத்தை அண்ணுர்ந்து பார்த்துக்கொண் டிருக்கிறீர்கள். உங்களிடத்தில்நின்று பரலோகத்திற்கு எழுந்தருளிய யேசுநாதர் எப்படிப் பரலோகத்திற்கு எழுந்தருளிப் போகக் கண்டீர்களோ, அப்படியே மீளவும்வருவார்" என்ருர்.

ஆம், திவ்வியயேசு திரும்பவும் இவ்வுலகிற்கு வருவார். ஆனுல், நமக்காகப் பாடுபடவுமன்று; நம்மைக் கருணைகாட்டி மீட்கவுமன்று. ஆனுல், நம்மை நடுத்தீர்க்க உலகம்முடிவில் வருவார். தம்சீஷர்களை ஆசீர்வதித்தவண்ணம் அன்புருவாய் மறைந்தவண்ணம் அன்புருவாய் மறைந்தவர் வரும்பொழுது ஓர்நீதிபதிபோல் கண்டிப்புள்ள தோற்றத்துடன் வருவார். உலகமுடிவாகிய அந்நாளில் நாம்தரித்திருக்கும் பாவபுண்ணிய வேஷத்திற்குத் தகுந்ததாய் அவரின்முகம் நமக்கு அக்களிப்பூட்டுவதாய் அன்றேல் பயங்கரம் வருவிப்பதாய்க் காட்சியளிக்கும்.

அவ்வீருந்தநாளில் தேவனின் வலப்புறத்தில் நிறுத்தப்படுவதற்குத் தகுதியுள்ளவர்களாய் இருப்போமானுல் நாமும் அக்களித்தமனதுடன் ஆண்டவரின் திருமுகதரிசனையைக்கண்டு பரவசமடைவோம். இடப்பக்கத்தில் நிறுத்தப்படுவோமானுல் "ஐயோ! இவ்வளவுநாளும் அன்பைப்புறக்கணித்து, கருணையைக் காறியிகழ்ந்து, அணைத்தகரத்தை ஆணிகொண்டு துளைத்துத் துரோகிகளாய்ச் சீவித்தோம்; இன்று எங்கு ஓடிமறைவோம்; எங்குமறைந்தாலும் எந்தவஸ்தும் எம்மைத்தெளிவாய்க் காண்பிக்குதே" என ஏங்கிப்புலம்புவோம்.

ஆகையால், ஆரோபணத் திருநாளாகிய இந்நாளில் "ஆண்டவரே! தேவரீர் திரும்பவும் இப்பூவுலகிற்கு எழுந்தருளும்பொழுது உமதுவருகை எமக்கு அச்சமூட்டுவதாய் இராமல் ஆனந்தமூட்டுவதாய் இருக்கும்படிக்குத் தூய்மையானசீவியம் நடத்தும்படி எமக்கு அருள்புரியும்"என மன்ருடுவோமாக.

—(⌒)—

# நகைச்சுவைச் சம்பவம்

செல்வி R. A. R. பிரான்சிஸ்

கணபதிப்பிள்ளை ஆசிரியர் கொஞ்சம் பருத்த தேகமுள்ளவர். அவரது மீசையும், சிவந்தகண்களும், தடித்த குரலும் யாரையும் திகிற்படுத்தும். அவர் வகுப்பிற்கு வந்ததும் பிள்ளைகளைப்பார்த்து, விளையாடாமல் நீங்கள் விரும்பியஎதையும் வாசியுங்கள் என்று சொல்லிவிட்டு நித்திரையில் எமலோகம் போய்விடுவார். ஆசிரியர் நித்திரையாய்ப்போக மாணவர்கள் தங்கள் கதைக்கப்பலில் பிரயாணத்தை ஆரம்பித்துவிடுவார்கள், தங்கள் வீட்டுநடபடிக்கைகள், ஊர் விஷயங்கள், சினிமாவிஷயங்கள் முதலான ஆராய்ச்சிகளில் இறங்கிவிடுவார்கள். வருடமுடிவில் நடந்த பரீட்சையில் ஒருவரும் சித்திபெறவில்லைஎன்பதைப் பரீட்சையின்பின் வரும் சராம்சம்காட்டும். இன்ஸ்பெக்றர் வகுப்புமாணவர்களிடம் வந்து பரீட்சிக்கத் தொடங்கினுர்.

**இன்ஸ்பெக்றர்:** நீங்கள் படித்த பாடங்களெவை?

**மாணவர்கள்:** இலக்கணம், இலக்கியம், கணிதம், இரசாயனம், பௌதிகம், பூமிசாஸ்திரம் இன்னும் பல ஐயா.

**இன்ஸ்பெக்றர்:** சரி, மெத்தவும்சந்தோஷம்; நான் உங்களிடம் நீங்கள் படித்த பாடங்களிலிருந்து ஒவ்வோர் விஞக்கள் கேட்கிறேன். நீங்கள் அதற்குச் சுருக்கமான நேர்விடைகளைக் கொடுக்கவேண்டும்.

**பரீட்சை தொடங்குகிறது**

**இன்ஸ்பெக்றர்:** சரி, இலக்கண பாடத்தில் இறந்தகாலம், எதிர்காலம், கேழ்காலம் என்பனவற்றைப் படித்தீர்களா?

**மாணவர்கள்:** ஆம், ஐயா.

**இன்ஸ்பெக்றர்:** சரி, அப்படியானுல் அவன் கலியாணம் செய்துகொண்டான். இதில்என்னகாலம் தோன்றுகின்றது?

**மாணவன் ஒருவன்:** இதில் அவனுடைய கெட்டகாலம் தோன்றுகின்றது.

**இன்ஸ்பெக்றர்**
**கோபத்தோடு பரீட்சிக்கிருர்**

**இன்ஸ்பெக்றர்:** (இலக்கியம்) தசரதமைந்தன் இராமன் வனம் சென்றதேன்?

**மாண. ஒருவன்:** இராமன் வனம் செல்லாவிடில் இராமாயணக் கதை அவ்வளவு சிறப்பாக முடிந்திராது.

**இன்ஸ்பெக்றர்:** (கணிதம்) இப்போது நான் ஒருரூபாய் கொடுத்தால் அதைப் பத்துப் பத்துச்சதமாக எத்தனைபேருக்குக் கொடுக்கலாம்?

**மாண. ஒருவன்:** ஒருவருக்கும் கொடுக்கமுடியாது ஐயா.

**இன்ஸ்பெக்றர்:** (எழுத்து) நீங்கள் நேரில்கண்ட ஒரு உதைபந்தாட்டப் போட்டியைப்பற்றி ஒருசிறு கட்டுரை எழுதுங்கள்.

**மாணவர்கள்:** (எழுதியது) பந்தாட்டம் ஆரம்பமாகியதும் மழைவந்தபடியால் ஆட்டம் நிறுத்தப்பட்டது. ஆட்டம் பார்க்கவந்த கூட்டம் ஓட்டத்துடன் வீட்டையடைந்தது.

**இன்ஸ்பெக்றர்:** (சரித்திரம்) நெப்போலியன் எப்போது பிறந்தான்?

**மாண. ஒருவன்:** எனது பேரனுர் அறியாதகாலத்தில் இருந்தநெப்போலியன் கதையை என்னிடம் கேட்டால் யான்என்ன சொல்வது.

**இன்ஸ்பெக்றர்:** (பூமிசாஸ்திரம்) மழைஉண்டாகக் காரணம்என்ன?

**மாணவர்கள்:** நம் நாட்டில் வசிக்கும் சிலபுண்ணியவான்களே காரணம்

**இன்ஸ்பெக்றர்:** (சித்திரம்) ஒரு வீடு தீப்பற்றி எரிவதையும், அதனருகில் சனக்கூட்டத்தையும் காட்டும் வண்ணம் ஓர்படம் வரையுங்கள்.

"சிலநிமிடத்தால் எல்லோரும் வெறும்கடதாசிகளைக் கொடுத்தார்கள்"

**இன்ஸ்பெக்றர்:** வீடுகளையாவது, சனக்கூட்டத்தையாவது காணவில்லையே?

**மாணவர்கள்:** வீடு எரிந்துவிட்டபடியால் சனங்கள்நிற்பதில் யாதும் பயனில்லை என்றுநினைத்துப் போய் விட்டார்கள்.

பரீட்சை இவ்வாறு ஒருமணிநேரம் வரையில்நடைபெற்றது. பரீட்சார்த்திகள்சித்தியடையாதபோதிலும் சந்தோஷமாயிருந்தனர். ஏனெனில்

[ தொடர்ச்சி 8-ம் பக்கம் ]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அருட் செல்வி



## இவர்கள் என்ன சொல்கிறார்கள்?

உலகம்

என் உருவம் உருண்டை என்பது உங்களுக்குத் தெரியும். எவ்வளவு வேடிக்கையும், வினோதமும் என்னிடத்தில் நிறைந்திருக்கிறது. நீரும், நிலையும், மலையும், குன்றும், மேடும், பள்ளமும் எல்லாமே என்னை அலங்கரித்துக்கொண்டிருக்கின்றன. உயிர்கள்யாவும் என் மீது ஓடுகின்றன. ஆடுகின்றன. பாடுகின்றன. எல்லா உயிர்களுக்கும் மேலாக மனிதன் ஆட்சிபுரிகிறான். இந்த மனிதவர்க்கத்திலே ஒருசாரார் பொருள் பொருள் என்று சாகிறார்கள். இன்னொருசாரார் ஆத்மா ஆத்மா என்று உயிரைவிடுகிறார்கள். என்ன செய்வது? ஒருவன் உயரப் பறக்கிறான், உயிரையே பிடிக்கப்பார்க்கிறான். ஆனால், மற்றவனோ உள்ளத்தில் உண்மையான தேவனை ஆராதிக்கிறான். எனக்கோ தலையிடி ... வேதனை ... அப்பப்பா!

மனிதன்

நான் பிறந்தேன். பிறந்ததுபோலவே வளரவும் உரிமையுண்டு. சுதந்திரமாகப் பிறந்தஎன்னைச் "சுகமாகவாழ்"என்று சொல்லவேண்டியதில்லை. எனக்குத் தெரியும். அறிவு இருக்கிறது. விஞ்ஞான அறிவு இருக்கிறது. இன்பம் இருக்கிறது. அறிவின்பம் இருக்கிறது. ஆண்டவனும்ஆண்டவன். இதுஎன்னகூத்து? இருக்கும்வரை இன்பங்களை அனுபவிப்பேன். என்னைத் தடுக்க எவருக்கும் உரிமையில்லை. மரணம் வருமாம், மாதா காட்சிகொடுத்தாவாம் எல்லாம் பொய். என்னைப்பொறுத்தவரையில் எவர் எக்கேடு கெட்டாலும் என்கொள்கையை என்றும் கடைப்பிடிப்பேன்.

பாவம்

ஏறக்குறைய என்னை எல்லோரும் அறிவார்கள். இலகுவாகவும் மக்கள்மேலே எனக்கு இடம் கிடைக்கும். மனிதன் இருக்கிறானே அவன் மகாகனம்தங்கியபிறவி. 'ஆங்காரம்' இவனை அனுப்பிவிட்டால் மனிதனுக்கு மூளை கலங்குகிறது. கோபம் கொதித்து எழுகிறது. கொலைசெய்கிறான். கொள்ளை அடிக்கிறான். கூடாத காரியங்களில் ஈடுபடுகிறான். குரங்குமனம் படைத்த மனிதன் கொள்ளிவால் பசாசாகிறான். ஐயோ பாவம்! இந்தமனிதசந்ததி வாழுமட்டும் நானும் வாழ்வேன். இதுமட்டுமா? இன்னும் கேளுங்கள். உலகில் மானிட சந்ததி பெருகிவிட்டதாம். உருக்குலைக்கவேண்டும். இதற்கு ஒரேயொருமருந்து அதுதான் குடும்பக்கட்டுப்பாடு. அடுத்தவன் வாழக்கூடாது. அவனுடைய இன்பமும், மகிழ்ச்சியும்தான் எனக்குவேண்டும். இதற்குச் சண்டை பிடித்துக்கொள்வதே ஒரு சாதாரண வழியெனக் காண்கிறான். நகரங்களிலே மக்கள் நடமாடுகிறார்கள். நாகரீகம் நாகரீகம் என்று நல்ல பண்புகளை இழக்கிறார்கள் மனிதர்கள். ஆனால், எல்லாரிடமும் எனக்கு மதிப்பு உண்டு. இந்தக் "கிறீஸ்தவர்கள்" என்று சொல்லப்படுகிறார்களே அவர்கள் மட்டில் எனக்குக் கொஞ்சம் பயம். அவர்கள்அனுசரிக்கும் பத்திமுயற்சிகள் — அடையும் பலன்களை எண்ணும்பொழுது அவர்களை என்ன செய்வதென்றே தெரியவில்லை. ஆனாலும் அவர்களிலும் ஒருசிலர் அம்பிடத்தான் செய்கிறார்கள். இருந்தாலும் எனக்கு என்றும் மதிப்பும், பெருமையும் உண்டு.

புண்ணியம்

என்னை ஆதரிப்பவர்கள் இறுதியில் இன்பசுகத்தைக் காண்பார்கள். மோட்சமடைவார்கள். சர்வேசுரனை முகமுகமாகத் தரிசிப்பார்கள். என்னில் அன்புள்ளவர்கள் குடும்பசெபமாலை சொல்லுகிறார்கள். ஒரு செபமாலை அல்ல, மூன்று செபமாலை. நூற்றி ஐம்பத்திமூன்றுமணிகளை எண்ணுகிறார்கள். நல்ல புத்தகங்களை — ஞானப் பிரயோசனத்தை அடையக்கூடிய புத்தகங்களை—தெய்வீக ஒளியைப் பரப்பும் தேவ பக்திரசமுள்ள புத்தகங்களை வாசிக்கிறார்கள். மரியாயின்சேனையில் மாதாவின் தொண்டர்களைப் பெருக்குகிறார்கள். காலமெல்லாம் கத்தோலிக்கசேவையையே ஆற்றுகிறார்கள். இவர்களை நான் கைவிடமாட்டேன். "புண்ணியம் வாழ்கவென்று பூலோகம் வாழ்த்தட்டும்". பூமகள் அதனைப் போற்றட்டும்.

—செ. செபமாலை

## உண்மை நட்பு

[தொடர்ச்சி]

ஒருநாள் தேவதாசன் விடாப்பிடியாக அலெக்சாண்டர் எக்காரணத்தைக் காட்டியபோதும் விடாமல் பாவசங்கீர்த்தனத்துக்கு அழைத்துச்சென்றான். இரும்பு தீயிலிடப்பட்டு இளக இளகத்தான் மென்மேலும் தீயிலிட்டு இளக்கவேண்டும் என்றஎண்ணத்துடன் பாவசங்கீர்த்தனத்துக்குப் போகும்வழியில் கதையொன்றைச் சொன்னான்.

இந்தியாவிலே கிறீஸ்தவ வாலிபனொருவன் வாழ்ந்துவந்தான். பாவம் செய்வதும், அதன்மூலம் மகிழ்வதுமே அவனது பெரும் களியாட்டமாக இருந்துவந்தது. ஒருநாள் அவன் பாவங்கட்டும் நோக்கத்துடன் தன்னறையைவிட்டு வெளிப்பட்டபொழுது "எங்கே போகிறாய்? இங்குநில்" என்ற சத்தம் கேட்டது. திரும்பினான். தன் அறையின் மூலையில் வைக்கப்பட்டிருந்த தேவதாயாரின் சொரூபம்தான் அவன் கண்களுக்குப் பட்டது. ஒரே ஒரு கணம்தான் சாதாரணமான அச்சொரூபத்தின் இருதயத்தை ஏழுஅம்புகள் குத்திட்டுநின்றன அதிலிருந்து இரத்தம் கசிந்துகொண்டிருந்தது. வாலிபன் இதைக் கண்ணுற்றவுடனே தேவமாதா அவனை நோக்கி: "இவ்வம்புகள் போன்று எத்தனை அம்புகளையெனினும் என் இதயத்தில் பாய்ச்சு; ஆனால், பாவங்களைச் செய்து என்னுடைய மகனைத் துக்கப்படுத்தாதே" எனக் கூறியதும் வியாகுலமான தோற்றம் மறையத் திரும்பவும் சாதாரணமான சொரூபம் காட்சியளித்தது. அவ்வாலிபன் சிந்தனையால் தூண்டப்பட்டான். தான்செய்த துரோகத்தை எண்ணியெண்ணி மனம் கசிந்துருகினான்.

அவன் சிந்தனையிலே நான் பாவம் செய்யும் ஒவ்வொரு வேளையிலும் தேவதாயாரின் காயங்களைப் புதுப்பிக்கிறேன்; மனுமகனுக்குத் துக்கத்தை வருவிக்கிறேன் என்ற எண்ணம் சுழன்றுகொண்டிருந்தது. அவனுடையமனம் திரும்பியது.

இதைக் கூறியதின்பின்னர் நாளை தொடக்கம் நீ தேவநற்கருணை உட்கொள்ளவேண்டும். ஆகவே, தகுந்த ஆயத்தத்துடனும், நல்லபிரதிக்கினையுடனும் பாவசங்கீர்த்தனம் செய்யவேண்டுமென வற்புறுத்தினான்.

ஆறு ஏழுமாதங்களாகப் பாவசங்கீர்த்தனத்தைப்பற்றி நினையாதிருந்தவன் பாவசங்கீர்த்தனம் செய்வதற்குக் கூச்சப்பட்டான். அவனது மனம் வெகுண்டது. எனினும், "வந்துவிட்டோம்; நாளை தேவநற்கருணையும்பெறவேண்டியிருக்கிறது" என அவன் நினைத்தபொழுதே சிந்தனையில் தன்நண்பன்சொன்னகதை எழுந்தது. தேவதாயார் எழுந்து: "உன் சிநேகிதனுக்காகவா நீ பாவசங்கீர்த்தனம் பண்ணப்போகிறாய்? நாளை கட்டாயமாக நீ திவ்விய நற்கருணை பெறவேண்டுமென நண்பன் வற்புறுத்தினதற்காகவா திவ்விய நற்கருணை பெறப்போகிறாய்? அன்றேல் நித்திய சீவியமடையும் பொருட்டா?" எனக் கேட்பதுபோன்ற பிரமை ஏற்பட்டது.

உடனே நல்ல பாவசங்கீர்த்தனம் செய்யவேண்டுமென உறுதிகொண்டு நல்லஆயத்தம் செய்தான். அப்பொழுதுதான் தான் விட்ட தவறுகளும், பாவத்தின் கனாகனங்களும் அவனுக்குப் புலப்பட்டன. அதைப்பற்றியே சிந்தியாதிருந்தவன் சிந்தித்தபொழுது தான் தேவகோபத்துக்கு எவ்வளவுதூரம் ஆளாகியிருக்கிறான் என்பதையும், அதனால் வரும் கேடுகளையும் எண்ணியபொழுதே கண்களில் இருந்து கண்ணீர் பெருக்கெடுக்கத் தொடங்கியது. பாவசங்கீர்த்தனத்துக்குச் செல்லும்போதே அவனுடைய ஆத்துமத்தில் ஓரளவு நிம்மதியும், மனச்சமாதானமும் ஏற்பட்டது.

பாவசங்கீர்த்தனத்தின் பின் குருவானவர் சிறந்த புத்திமதிகளைக் கூறிப் பாவச் சமயங்களை விலக்கும் முறைகளையும் எடுத்து விளக்கியபோது அவைகளைத் தன் மனத்திலிருத்தித் தனதாக்கிக்கொண்டான். நல்லபிரதிக்கினையும் செய்து, அபராதத்தையும் நிறைவேற்றியபின் தன் நண்பனையே அவனுடைய உள்ளம் வாழ்த்தியது.

அடுத்தநாள் தேவநற்கருணை உட்கொண்டபொழுது அவனுடைய உள்ளத்தில் பூரண மனச் சமாதானம் நிலவியது. இதன்பின்னர் அவனுடைய வாழ்க்கையில் பெரும்மாற்றங்கள் நிகழ்ந்தன. எதிலும் சிரத்தையும், கவனமும் முன்போல் ஏற்பட்டது. தன்னுடைய கெட்ட சிநேகிதர்களையும் தன் பெருமுயற்சியின் பயனாகத் திருத்தினான். அவர்களையும் மரியாயின்சேனையிற் சேர்த்துத் தானும்சேர்ந்து சிறந்த தொண்டுகள் செய்தான். அவன் பிரதானமாகப் பாவிகளை மனந்திருப்புவதற்காகவே தேவதாயாரை நோக்கிச் செபிப்பான்.

அவன் எதில் தவறியபோதிலும் பாவிகளை மனந் திருப்புவதற்காகத் தேவதாயாரை வேண்டுதல் செய்வதிலும், திவ்வியபூசைக்குச்சென்று திவ்வியநற்கருணை வாங்கவும் தவறமாட்டான். அவன் தேவநற்கருணை உட்கொண்டதும் யேசுநாதசுவாமி வசனித்த "தேவநற்கருணையில் பூரண திருப்தியடைபவர்கள் உண்மையாகவே மனச்சமாதானமடைவார்கள்" என்ற வாக்கியம் ரீங்காரமிட்டவண்ணமே இருக்கும்.

—✻—

## நீங்களும் மாதாவுக்கு மாலையிட்டீர்களா?

லீமாநகரத்து அர்ச். றோசம்மாள் ஒருநாள் தன் சகோதரர்களுடன் மாதா சுரூபத்தின்முன் முழந்தாட்படியிட்டுப் பக்திப்பரவசமாய்ச் செபமாலை ஓதிக்கொண்டிருந்தாள். அந்நேரம் அவர்கள் ஒவ்வொரு பிரியதத்தம் சொல்லும்போதும் அநேகாநேக றோசாப்புஷ்பங்கள் அவர்களிடமிருந்து மேல்நோக்கிப் போய்க் கொண்டிருப்பதைக் கண்டாள். என்றாலும் அவளுக்குநேரேயிருந்து சென்ற புஷ்பங்களைத் தவிர ஏனையவையெல்லாம் திரும்பக் கீழ்நோக்கியேவந்துகொண்டிருந்தன. இதைக் கண்ட றோசம்மாள் மிகுதியும் துயரப்பட்டாள்.

ஆனால், அச்சணமேஅவள் அந்தத் துயரந்தரும் எண்ணத்திற்கு — தன் சந்தேக வினாவிற்கு ஆறுதலான, திட்டமான விடையைப் பெற்றாள். எப்படியென்றால் அந்நேரம் அவளது பரிசுத்த காவற் சம்மனசானவர் காணப்பட்டு, அவளைத் தேற்றிச் சொன்னதாவது: "மகளே! நீ வீணுக்குக் கவலைப்படாதே; எல்லோரும் செபிக்கும்போது பக்தியுடன் செபிப்பதில்லை; அப்படிப் பக்தியின்றிச் செபிப்போருடைய பிரியதத்தங்கள் ஒவ்வொன்றுமே திரும்பிவிழுந்த ஒவ்வொரு றோசாப்பூக்களாம்; நீசொல்லும் ஒவ்வொரு பிரியதத்தத்தையும் பக்தியுடன்சொன்னமையால் அவை ஒவ்வொன்றும் மாதாவுக்குகந்த ஒவ்வோர் புஷ்பங்களாயின; நீ கவலைப்படாதே; முடிவைப் பின்பு காண்பாய்" என்று கூறி மறைந்தார்.

அவர்கள் செபமாலை ஓதி முடிந்தது. றோசம்மாள் செபமாலையின் முடிவுச் செபத்தை ஓதும்பொழுது ஓர் அதிசயக் காட்சியைக் கண்டாள். அவளது ஐம்பத்துமூன்று பிரியதத்தங்களையும் ஐம்பத்துமூன்று புஷ்பங்களாகக்கொண்ட ஓர் அழகிய மாலையை அணிந்து மாதா அவளுக்குக் காணப்பட்டா.

ஆனதினால், அருமைச் சகோதரர்களே! நீங்கள் செபிக்கும் ஒவ்வொரு பிரியதத்தத்[illegible] செபியுங்கள். அப்போது நீண்ட பெரியமாலைகளை அருமைஅன்னைக்கு [illegible]பார்க்கலாமல்லவா?

> ● தன்னையே அதிகாரியாய்த் தெரிந்துகொள்பவன், தன்னை ஓர் பைத்தியகாரனின் கண்காணிப்பில் வைக்கிறான்.
>
> —அர்ச். பேர்னாட்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நகைச்சுவைச் சம்பவம்

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

அசித்தியடைவோர் வெற்றியடைவார்என்னும் நம்பிக்கையினுல்தான். ஆசிரியர் நாகம்போல் தம்மாணவர்கள்மீது சிறிவிழுந்தபோதிலும் மாணவர்கள் "இன்றைக் கென்னடா நம்மஆசிரியர் நித்திரைகொள்ளாது சும்மா இருக்கிருர்" என்று தம்முள் பேசிக்கொண்டனர்.

## பாலகயேசுவை ........

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

பொருந்திய கரங்களிலே பிள்ளைகள் இருவரையும் ஏந்தி அணைத்தபடியே கன்னிகாமடம்கொண்டுபோய்ச்சேர்த்தான்.

அப்பால் நிகழ்ந்ததென்ன? மறுமுறை காட்டிலே திவ்வியபூசை நிகழ்ந்தது. அப்போது அந்தக் கானக விருட்சங்களின் மத்தியில் நின்று திவ்விய கானங்களைப் பாடியவர்களில் அந்திரேவெவும் ஒருவனுயிருந்தான். ஏனெனில், அவனும் ஒரு கிறீஸ்தவனுகிவிட்டான். அவன் கிறீஸ்தவனுனதை எவருமே அறியவில்லை. வாஸ்லாவ்தானும் அறிந்துகொள்ளவில்லை.

## 2-ம் வருட மரண ஞாபகம்

பிறப்பு — இறப்பு
10-9-1939. — 29-5-1958:

ஓ! என் யேசுவே, இறந்த சகல ஆத்துமாக்களையும் பரலோக மோட்சபாதையில் வழிநடத்தியருளும்.

எங்கள் நேசமகன் தம்பிராசா யோசேப் ஜீவரெத்தினம் என்பவர் கரடியனுறு கிருஷிக சாதனுபாடசாலையில் படித்துக்கொண்டிருந்தபோது இவ்வுலகவாழ்வை நீத்துப் பரலோக வாழ்வெய்திய இரண்டாம்வருட நிறைவு 29-5-60-ந் தேதி பூர்த்தியாகிறபடியால் இதைக் கண்ணுறும் வண குருப்பிரசாதிகளே, சங்கைக்குரிய சன்னியாசிகளே, சங். கன்னியாஸ்திரிகளே, இனசன சிநேகிதர்களே கிறிஸ்தவகருணையுடன் இவரின் ஆன்ம சாந்திக்காக வேண்டிக்கொள்ளுமாறு உங்களை வினயமாய் வேண்டுகின்ரேம். அன்றுதினம் எட்டியாந்தோட்டை அர்ச். மரியநாயகி தேவாலயத்தில் இவரின் ஆன்மா சாந்திக்காகத் திக்கப் பூசைநடந்தேறும்.

இவரை இழந்து தயருறும்:—

**தந்தை—பொ. தம்பிராசா**
ஆசிரியர், கிரிப்போர்.

**தாய்—த. அன்னப்பாக்கியம்**
கிரிப்போர்.

சகோதர சகோதரிமார்:—

**த. யே. தேவராஜா** } வந்தாறுமூலை
**த. றீ. சரோஜா** } மத்தியகல்லூரி.
**த. திரேசம்மா,**—கிரிப்போர்.

கிரிப்போர் பாடசாலை,
எட்டியாந்தோட்டை.

## நன்றியறிந்த ஸ்தோத்திரம்

யேசுவின் திருஇருதய இரக்கத்தினுலும், பரிசுத்த சதாசகாயமாதா, அர்ச். அந்தோனியார் இவர்களின் மன்ருட்டாலும் எனக்குக்கிடைத்த சகாயத்துக்கு நன்றியறிந்த தோத்திரம்பண்ணுகிறேன். இன்னும் முற்றிலும் அனுகூலமாக மாதாவைக் கெஞ்சிமன்ருடுகிறேன் அவரின் நாமம் என்றும் புகழப்படுவதாக. பிரசுரிக்கத் தாமதமானதற்கு மன்னிப்புக் கோருகிறேன்.

ஓர் அடியாள்.

ரோசாப்பூவானது தனது நிறத்தையும், வாசவனையையும் வேரிலிருந்து பெற்றுக்கொள்ளுகின்றது. மனிதனே இளம் பருவத்திலிருந்தே தனது நற்குணங்களையும், புண்ணியங்களையும் பெற்றுக்கொள்ளுகிருன்.

# கோட்டுவிற்பனவு விளம்பரம்

இல. M. B. 2315

## யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டில்

காரைநகர், காரைநகர் மேற்கு
பொன்னையா மயில்வாகனம்
—வழக்காளி.

எதிராக
துன்னலை தெற்கு,
1. வல்லிபுரம் இராமுவும், பெண்
2. இலட்சுமிப்பிள்ளையும்
—எதிராளிகள்.

யாழ்ப்பாணம், டிஸ்திறிக் கோட்டில் M. B. 2315-ம் இலக்க வழக்கில் எனக்குக்கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னுல் விபரிக்கப்படும் ஏழு துண்டுக் காணிகளை 1960-ம் வருடம் ஆனி மாதம் 25-ம் திகதி சனிக்கிழமை முற்பகல் 10 மணிதொடக்கம் அந்தந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத் தொகை—முதல்வட்டி ரூ. 16,320-உம் இன்னும் ரூ. 15,000-க்கு 1958-ம் ஆண்டு ஆடி மாதம் 3-ந் திகதி தொடக்கம் 1959-ம் ஆண்டு பங்குனி மாதம் 10-ந் திகதி வரையும் 100 க்கு 12% வட்டியும், பின்பு கூட்டுத்தொகைக்கு இறுபடும்வரையும் 5% வட்டியும், கோட்டுச் செலவு ரூபா 375 சதம் 21. இதில் ரூபா 200 கொடுபட்டது.

### ஆதன விபரம்

1. வடமாகாணம், யாழ்ப்பாண டிஸ்திறிக், வடமராட்சிப்பகுதி கட்டைவேலிக்கோவிற்பற்று துன்னலை செகக்கொடிதேவன் குறிச்சி கிருவனைப்புலம் நி. ப. $19\frac{1}{2}$. இதில் ஆட்சிப்படி பிரிவிட்ட $\frac{1}{8}$ பாகம் நி. ப. 2 குளி $7\frac{7}{8}$. இதில் வடக்குப்பக்கமாக நி. ப. $\frac{1}{2}$ நீக்கி, மீதி தெற்குப்பக்கமாக ப. நி. இ 1-ம், குளி $16\frac{7}{8}$. பனைகளும் வடலிகளும் வேம்பும் கடைக்கட்டிடமும் கிணறும். எல்லை: கிழக்கு—வல்லிபுரம் கைம்பெண் சின்னப்பிள்ளையின் ஆதனம். வடக்கு—வல்லிபுரம் முருகேசுவின் கழிவிடப்பட்ட ஆதனமும், மறுபேரின் ஆதனமும். மேற்கு—ஒழுங்கை. தெற்கு—ரோட்டு. இதடங்கலும்.

2. ஷ்ை காவெட்டிக் குறிச்சி கிருவனை தெற்கு ப. நி. இ. $7\frac{7}{8}$. ஷை நி. ப. 17. இதில் கிழக்குப்பக்கமாக ப. நி. இ. 8 நீக்கி. மீதி ப. நி. இ. $16\frac{7}{8}$. எல்லை: கிழக்கு—கவர்மென்ற் சந்தையும் ரோட்டும். வடக்கு—எங்களின் முதலாம் பேரின் ஆதனம். மேற்கு—வல்லிபுரம் உலகப்பனுக்கும் மறுபேருக்குமுரிய ஆதனம். தெற்கு—ஒழுங்கை. இந்தக்காணி அடங்கலிலும் பனைகள் கொட்டில்கள் வீடுகள் அடங்கலிலும் சொரியலாய் எட்டில் ஏழில் $(\frac{7}{8})$ அரைவாசியும் இதில் புதிதாகக் கட்டப்பட்ட கடைக்கட்டிடம் நிந்தமாகவும்.

3. ஷை கிருவனை ப. நி இ. $24\frac{7}{8}$. இதில் கிழக்குப்பக்கமாக சந்தைக் கெடுபட்ட நிலம் ப. நி. இ. 7 நீக்கி மீதி ப. நி. இ. $17\frac{7}{8}$-ம் பனைகளும் கொட்டில்களும் வீடும். எல்லை: கிழக்கு—சந்தை. வடக்கு—எங்களில் 1-ம் பேர்வழிகாரனுக்கும் மறுபேருக்குமுரிய ஆதனம். மேற்கு—வல்லிபுரம் உலகப்பனுக்கும் மறுபேருக்குமுரிய ஆதனம். தெற்கு—ஒழுங்கை. இதடங்களில் வீட்டில் மேற்கோப்பியம் பிறநீங்கலாக மீதமடங்களில் $\frac{1}{36}$ பங்கு.

4. ஷை வீரசுந்தர முதலி குறிச்சி தென்னப்பை ப. நி. இ. $2\frac{7}{8}$, ஷை ப. நி இ. $6\frac{3}{8}$, ஷை ப. நி. இ. $2\frac{3}{8}$, ஷை ப. நி. இ. $2\frac{7}{8}$, ஷை ப. நி. இ. $5\frac{7}{8}$, ஷை ப. நி. இ. $5\frac{7}{8}$, ஷை ட. நி. இ. $7\frac{5}{8}$. இந்தப் பிரிவுகளில் ஆட்சிப்படி கூடிய ப. நி. இ. $20\frac{7}{8}$-ம் கணறும். எல்லை: கிழக்கு—வேலர் ஏரம்பருக்கும் மறுபேருக்குமுரிய ஆதனம். வடக்கு—பரமாழ்வாருக்கும் மறு பேருக்குமுரிய ஆதனம். மேற்கு—ஆறுமுகம் கணபதிப்பிள்ளை மறுபேருக்குமுரிய ஆதனம். தெற்கு—வல்லிபுரம் பெண் சிதம்பரத்துக்கும் மறுபேருக்குமுரிய ஆதனம். இதடங்களில் சொரியலாய் ஆயிரத்து நானூற்றி தொண்ணூற்றி ஐந்து பங்கில் நூற்றி நாற்பத்திரெண்டு $(\frac{142}{1495})$.

5. ஷை துன்னலை செகக் கொடிதேவன் குறிச்சி மணியன் தோட்டம் வீடு ப. நி. இ. $4\frac{7}{8}$. பனைகள் வடலிகளும் வேம்புகளும் கொட்டில் வீடுகளும் கிணறும். எல்லை: கிழக்கு—சிதம்பரப்பிள்ளை பெண் சின்னப்பிள்ளை மறுபேருக்குமுரிய ஆதனம். வடக்கு—ஒழுங்கை, மேற்கு—சின்னத்தம்பியார் அம்பலவிக்கும் மறுபேருக்குமுரிய ஆதனம். தெற்கு—ரோட்டு. இதடங்களில் சொரியலாய் முன்னூற்றி அறுபதில் நாற்பத்தேழு $(\frac{47}{360})$ பங்கும்.

6. ஷை இறை மணியன் தோட்டம் ப. நி. இ. $7\frac{3}{4}$. பனைகள் வடலிகளும் வேம்புகளும் கொட்டில் வீடுகளும் கிணறும். எல்லை: கிழக்கு—சிதம்பரப்பிள்ளை பெண் சின்னப்பிள்ளை மறுபேருக்குமுரிய ஆதனம். வடக்கு—ஒழுங்கை, மேற்கு—சின்னத்தம்பியார் அம்பலவிக்கும் மறுபேருக்குமுரிய ஆதனம். தெற்கு—ரோட்டு. இதடங்களில் சொரியலாய் ஐந்தில் ஒருபங்கும் $(\frac{1}{5})$.

7. ஷை துன்னலை வீரசுந்தர முதலி குறிச்சி தெனிதி நெ. இ. 30. இதில் ஆட்சிப்படி உலாந்தா மேஸ்தர், எம். வேலுப்பிள்ளை என்பவரால் விஸ்தரிக்கப்பட்டு பருத்தித்துறை றெக்குவஸ்ற் கோட்டில் அணைக்கப்பட்ட 884-ம் இலக்கப்படத்தின்படி ப. நி. இ. 8. எல்லை: கிழக்கும், வடக்கும்—வெள்ளையர் கயிலாயருக்கும் மறுபேருக்குமுரிய ஆதனம். மேற்கு—தம்பையா பெண் நாகம்மாவிற்கும் மறுபேருக்குமுரிய ஆதனம். தெற்கு—தாமு கந்தருக்கும் மறுபேருக்குமுரிய ஆதனம். இதடங்கலிற் சொரியலாய் அரைவாசி.

**செ. இரத்தினசபாபதி,**
கொம்மிஷனரும், விலைமதிப்பாளரும்.
35, 4-ம் குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணம். 18-5-60

## நன்றியறிந்த ஸ்தோத்திரம்

இரண்டு வருடகாலமாக எவ்வித வைத்தியரின் சிகிச்சைக்கும் மாருத வருத்தம் சதாசகாய மாதாவுக்கு ஒன்பது கிழமை நவநாள் செய்ததின் நிமித்தம் மாறி, பூரணசுகம் அடைந்திருக்கிறேன். சதாசகாயமாதாவுக்கு நன்றிஸ்துதிசொல்லி, இதைநான் பிரசுரப்படுத்துகிறேன்.

அ. ஜெயசீலி கூஞ்ஞ.
பெரிய பண்டிவிரிச்சான்,
மடுக்கோவில்.

## மாருதப்புரவியின் மாற்றம்

பண்ணைக்கடல் போக்குவரத்துச் சேவைக்கென்று அரசினரால் வழங்கப்பட்ட மாருதப்புரவி என்ற மோட்டர்லோஞ்ச் தற்போது ஊர்காவற்றுறை—காரைநகர் கடற்போக்குவரத்துச்சேவைக்குப் பிரயோகிக்கப்பட்டு வருகிறது.

## அர்ச். பிரான்சீஸ்குவின் மூன்ருஞ்சபை

அர்ச். பிரான்சீஸ்குவின் மூன்ருஞ்சபை மாதாந்தக்கூட்டம் இம்மாதம் 28-ந்தேதி சனிவாரம் பி. ப. 4 மணியளவில் சஞ்சூசையப்பர்சிற்ருலயத்தில் நடைபெறும். கூட்டமுடிவில் பகுதித்தலைவர்கள் சங்கம் நடைபெறும்.

இங்ஙனம்,
A. S. Francis OF Mary,
சபைக் கர்த்தருக்காக.

சீவியத்தின் எந்நிலையும் அததற்குரிய ஆபத்தைக் கொண்டுள்ளது. ஆயினும், வாலிபவயசுதான் ஒருவனை அதன்வலையிற் சிக்குண்ணப் பண்ணுவது. நற்குணங்களை மனதிற் பதிக்கும் வசந்தகாலம் இதுவே.

கொழும்புத்துறை
அர்ச். சூசையப்பர் தாபனதினமும்

## பழையமாணவர் தினமும் 28—5—60

### நிகழ்ச்சிகள்

**27-5-60 வெள்ளிக்கிழமை:**
காலை 9-00 மணிக்குப் பொருட்காட்சியும், விற்பனையும்.
மாலை 2-00 மணிக்கு விளையாட்டுப்போட்டி ஆரம்பம்.
,, 6-30 மணிக்குப் பரிசுகள் வழங்குதல்.
,, 7-30 மணிக்கு மாலை ஆராதனை.

**28-5-60 சனிக்கிழமை:**
காலை 6-30 மணிக்குப் பாடற்பூசை.
,, 8-00 மணிக்குக் காலைப் போசனம்.
,, 8-30 மணிக்குப் புதிய—பழைய மாணவர் கரபந்தாட்டப் போட்டி, புதிய-பழைய மாணவிகள் வலைப் பந்தாட்டப் போட்டி.
,, 10-00 மணிக்குப் பழைய மாணவர் சங்க பொதுக் கூட்டம்:
1. தலைவர் முன்னுரை
2. கடந்த வருட அறிக்கை
3. கடந்தவருட வரவுசெலவுக் கணக்குகள்
4. தராதரப் பத்திரங்கள் வழங்குதல்
5. நிர்வாகசபைத் தேர்தல்
6. இளைப்பாற்றிநிதிச்சங்க அறிக்கை
7. அங்கத்தவர் குறிப்புரை
8. தலைவர் முடிவுரை

மாலை 12-30 மணிக்கு மதிய விருந்து.
,, 4 மணிக்குத் தேநீர்.
,, 5-00 மணிக்கு மாலை ஆராதனை, அர்ச். சூசையப்பர் திருச்சுரூப சுற்றுப்பிரகாரம்.

## நன்றியறிந்த ஸ்தோத்திரம்

யேசுவின் திருஇருதயஇரக்கத்தினுலும், பரி. சதாசகாயமாதா, அர்ச். சூசையப்பர், அர்ச். பதுவை அந்தோனியார் மற்றும்சகல அர்ச்சியசிஷ்டர்கள், உத்தரிக்கிற ஆத்துமாக்கள் ஆகியோரின் வேண்டுதலினுலும் நான் பரீட்சையில் சித்தி அடைந்ததற்கும், எனது சகோதரிக்குப் பிரசவத்தின் பின் ஏற்பட்ட கடினவியாதி நீங்கினதற்கும், சகோதரனுக்குக் காலில் ஏற்பட்ட வருத்தம் பூரணசுகமடைந்ததற்கும், இன்னும் அநேக சடுதியான ஆபத்துக்களினின்று எங்கள் குடும்பம் காப்பாற்றப்பட்டமைக்கும், நன்றிதெரிவித்து நாங்கள் நினைத்திருக்கும் நற்காரியங்கள் அனுகூலமடையவும், குடும்பத்தில் தேவாசீர்வாதமும் சமாதானமும் நிலைநிற்கும்படியும் இறைவனை வேண்டுகின்ரேம். பிரசுரிக்கத் தாமதமானதற்கு யேசுவிடம் மன்னிப்புக் கோருகிறேன்.

Batticaloa. Carmel Jgnatius.

● வத்திக்கான்மாளிகையில் ஒரு இரவைக்கழித்த ஒரேயொரு மாது, மெக்சிக்கோதேச மக்ஸிமிலியன் சக்கிரவர்த்தியின் தேவியாரான சாளோட்ரிச்சக்கிரவர்த்தினியே, இவள் தன் நாயகருக்கு உயிர்ப்பிச்சைஅளிக்கப்படவேண்டி மனுப்பேசுமாறே அங்கு சென்றிருந்தாள்.

தேவனில் உன்சிநேகிதர்களை நேசி தேவனுக்காக உன்சத்துராதிகளைச் சிநேகி.

—அர்ச். எலிசியுஸ்.

Printed and Published for the Proprietor by NICHOLAS JAMES, residing at No. 20, Fifth Cross Street, Jaffna, at St. Joseph's Catholic Press, Catholic Mission Premises, Main Street, Jaffna, on Thursday, May 26-1960.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org